க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2018

# மதிப்பீட்டு அறிக்கை

## 72 - தமிழ்

Curriculum
Assessment & Evaluation
Teaching
Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

முழுப் பதிப்புரிமையுடையது.

# க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2018

# மதிப்பீட்டு அறிக்கை

## 72 - தமிழ்

Curriculum
Assessment & Evaluation
Teaching Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# அறிமுகம்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையானது இலங்கையின் சிரேஷ்ட இடை நிலைக் கல்வியின் இறுதிச்சான்றிதழ் பரீட்சையாகும். சிரேஷ்ட இடை நிலைக் கல்வியின் இறுதியில் மாணவர்களின் அடைவுமட்டத்தைச் சான்றுப்படுத்தல் இப்பரீட்சையின் முக்கிய நோக்காக இருந்தபோதும் தேசிய பல்கலைக்கழகங்கள், வேறு கல்வி மற்றும் தொழில்பயிற்சி நிறுவனங்கள், தேசிய கல்வியியல் கல்லூரிகள் என்பவற்றுக்குத் தகைமையானோரைத் தெரிவுசெய்தலும் இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இடம்பெறுவதால் அடைவுப்பரீட்சையாகவும் தேர்வுப்பரீட்சையாகவும் க.பொ.த (உ.தர)ப் பரீட்சை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தன்மையைப் பெறுகிறது. மேலும் மூன்றாம்நிலையில் தொழிலில் பிரவேசிப்பதற்கான தகைமையை சான்றுப்படுத்தும் பரீட்சையாகவும் இது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இப்போது இப்பரீட்சைக்காக 2018 ஆம் ஆண்டில் 218191 வரையிலான பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 48920 வரையிலான தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர்.

இப்பரீட்சையில் உயர் அடைவு மட்டத்தைப் பெறுவதற்காக மாணவர்களும் அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவுசெய்வதற்காக ஆசிரியர்களும் பெற்றோரும் பெரிதும் முயற்சிசெய்கின்றனர். இந்த மதிப்பீட்டு அறிக்கையை அவர்களின் அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவும்பொருட்டே இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தயாரித்துள்ளது. இந்த மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் பரீட்சையை எதிர்பார்த்திருப்போர், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடப்பொறுப்புக் கல்விப்பணிப்பாளர்கள், பெற்றோர், கல்வி ஆய்வாளர்கள் அனைவருக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

இந்த மதிப்பீட்டு அறிக்கை I, II, III என மூன்று பாகங்களைக் கொண்டுள்ளது.

க.பொ.த (உ.தர) தமிழ்ப் பாடத்தின் நோக்கம், பாடஅடைவு பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பாகம் I இல் அடங்கியுள்ளன. இப்பாகத்தில் பாடத்திற்குத்தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை, அவர்கள் தரங்களைப் பெற்றுள்ளவிதம், மாவட்டமட்டத்தில் பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்களைப் பெற்றுள்ளவிதம், வகுப்பாயிடைக்கேற்ப புள்ளிகளின் பரம்பல் ஆகிய பாடஅடைவு பற்றிய புள்ளிவிபரத் தகவல்களும் தமிழ்ப்பாடத்தின் வினாப்பத்திரம் I, II என்பவற்றில் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டவிதம், அவ்வினாக்களுக்கும் அவ்வினாக்களின் பகுதிகளுக்கும் புள்ளிகள் பெற்றுள்ளவிதம் என்பனபற்றி விரிவாகக் குறிப்பிடும் பாடஅடைவு பற்றிய பகுப்பாய்வும் உள்ளடக்கப்பட்டுள்ளன. க.பொ.த (உ.தர)ம் - 2018 பரீட்சையில் தமிழ்ப்பாடத்தின் வினாப்பத்திரம் I, II என்பவற்றுக்கான வினாக்கள் அவ்வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் விடைகள் அளித்திருந்தமை பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பாகம் II இல் அடங்கியுள்ளன. அதில் வினாப்பத்திரம் I, II என்பவற்றின் வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளிவழங்கும்திட்டம், விடைகள் அளித்தமை பற்றிய அவதானிப்புக்கள், முடிவுகள், பாடஅடைவை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளை மூலம் விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபட்ட பிரதமபரீட்சகர்கள், மேலதிக பிரதமபரீட்சகர்கள், உதவிப்பரீட்சகர்கள் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட தகவல்கள், அவதானிப்புகள், கருத்துகள், ஆலோசனைகள், மரபுரீதியான சோதனைக்கோட்பாடு (Classical Test Theory) மற்றும் உருப்படித்துலங்கல் கோட்பாடு (Item Response Theory) என்பவற்றைப் பயன்படுத்தி பரீட்சார்த்திகளின் துலங்கல்களைப் பகுப்பாய்வு செய்தலினூடாகப் பெறப்பட்ட தகவல்கள் என்பன இந்த அறிக்கையை தயாரிப்பதற்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளன.

வினாப்பத்திரத்திலுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள், கற்றல்-கற்பித்தல் பணிகள் பற்றிய கருத்துகள், ஆலோசனைகள் என்பனவும் இந்த அறிக்கையின் பாகம் III இல் அடங்கியுள்ளன. பல்வேறு தேர்ச்சிகள், அத்தேர்ச்சிமட்டங்களை அணுகுவதற்கான கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்கும் விதம் என்பன தொடர்பாக இந்த அறிக்கையானது பெரிதும் துணைபுரியும் என நம்புகின்றேன். **எதிர்காலத்தில்** தொகுக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கைகளின் பண்புத்தரத்தை மேம்படுத்தக் கூடிய பயன்தரும் கருத்துகள், ஆலோசனைகள் என்பவற்றை எங்களுக்குச் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கிய பிரதம பரீட்சகர்கள், மேலதிக பிரதம பரீட்சகர்கள், உதவிப் பரீட்சகர்கள், ஆர்வத்துடன் பங்களிப்பு வழங்கிய குழு உறுப்பினர்கள், பொறுப்புடன் கடமையாற்றிய இலங்கைப் பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பணிக்குழுவினர் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பீ. சனத் பூஜித**
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2020 மே 14
ஆய்வு அபிவிருத்திக் கிளை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| ஆலோசனை | - | **பீ. சனத் பூஜித**<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| **ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும்** | - | **கயாத்திரி அபேகுணசேகர**<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு மற்றும் அபிவிருத்தி) |
| **இணைப்பாக்கம்** | - | **எஸ். பிரணவதாசன்**<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் |
| **பாட இணைப்பாக்கம்** | - | **எம். செந்தில் வதனி**<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் |
| **மொழிப்பதிப்பு** | - | **பேராசிரியர். வ. மகேஸ்வரன்**<br>ஓய்வு நிலைப் பேராசிரியர்<br>பேராதனைப் பல்கலைக்கழகம் |
| | | **கலாநிதி. க. இரகுபரன்**<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவில் |
| **ஆக்கக்குழு** | - | **க. குணசேகரம்**<br>உதவிக் கல்விப் பணிப்பாளர்<br>பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகம்<br>களுவாஞ்சிக்குடி |
| | | **க. சந்திரகுமாரி**<br>ஆசிரியர் சேவை<br>கொ/ விவேகானந்தாக் கல்லூரி<br>கொழும்பு |
| | | **மு. இந்திரகுமார்**<br>ஆசிரியர் சேவை<br>ப/ பாரதி மகா வித்தியாலயம்<br>பதுளை |
| | | **ஞா. இந்திரராஜா**<br>ஆசிரியர் சேவை<br>வ/ அல். இக்பால் ம.வி.<br>வவுனியா |
| | | **த. திலீபா**<br>ஆசிரியர் சேவை<br>மே/ பிலி / நுகேகொடை தமிழ் ம.வி<br>நுகேகொடை |
| **கணினி பக்க வடிவமைப்பு** | - | சு. துஷாந்தினி<br>தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப உதவியாளர் |
| | | காஞ்சனா சுப்ரமணியம்<br>கணினி தரவுப் பதிவாளர் |
| **முகப்பு அட்டை வடிவமைப்பு** | - | ஏ.எல்.கே. சத்துராணி<br>முகாமைத்துவ சேவை அலுவலர் |

# உள்ளடக்கம்


**பாகம்** I **பக்க எண்**

1.0 **பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும்**

1.1 **பாடக் குறிக்கோள்கள்** 1

1.2 **பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்**

1.2.1 பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2

1.2.2 பரீட்சார்த்திகளால் பெறப்பட்ட தரங்கள் 2

1.2.3 முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்ற தரங்கள் - மாவட்ட அடிப்படையில் 3

1.2.4 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம் 4

1.3. **பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு**

1.3.1 வினாத்தாள் I இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 5

1.3.2 வினாத்தாள் I இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 5

1.3.3 வினாத்தாள் I - பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு 6

1.3.4 வினாத்தாள் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 7

1.3.5 வினாத்தாள் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 7

1.3.6 வினாத்தாள் II - வினா 1 (அ) பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு 8

1.3.7 வினாத்தாள் II - பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு 9

**பாகம்** II

2.0 **வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்**

2.1 **வினாத்தாள் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்**

2.1.1 வினாத்தாள் I - கட்டமைப்பு 10

2.1.2 வினாத்தாள் I - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடை அளித்தமை தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள், ஆலோசனைகள் 11

2.1.3. வினாத்தாள் I இற்கு விடையளித்துள்ளமை தொடர்பான பொதுவான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் 36

2.2 **வினாத்தாள் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்**

2.2.1 வினாத்தாள் II - கட்டமைப்பு 37

2.2.2 வினாத்தாள் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடை அளித்தமை தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள், ஆலோசனைகள் 38

2.2.3 வினாத்தாள் II இற்கு விடையளித்துள்ளமை தொடர்பான பொதுவான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும். 80

**பாகம் III**

3.0 **விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**

3.1 **விடையளித்தலின்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்** 81

3.2 **கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும்** 82

# பாகம் I

## 1.0 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும்

### 1.1 பாடக் குறிக்கோள்கள்

- மொழிவழியாகத் தெளிவாகச் சிந்திப்பதற்கும் வெளிப்படுத்துவதற்கும் தொடர்பாடலுக்கும் வேண்டிய தேர்ச்சிகளைப் பெற்றுக்கொள்ளல்.
- இலக்கியத்தை விளங்கிக்கொள்ளவும் இரசிக்கவும் விமர்சனஞ்செய்யவும் வேண்டிய தேர்ச்சிகளை விருத்திசெய்துகொள்ளல்.
- பல்வேறு இலக்கியவடிவங்களின் அமைப்பை அறிந்து அவற்றுடன் தொடர்புடைய ஆக்கங்களைப் படைக்குந்திறனை வளர்த்துக்கொள்ளல்.
- தமிழ் இலக்கியவரலாற்றுப் போக்கினையும் அதன் பண்புகளையும் விளங்கிக்கொள்ளல்.
- அடிப்படை இலக்கணஅறிவை விருத்தி செய்துகொள்ளல்.
- இலக்கிய வழிவரும் மானுடப்பண்பாட்டு விழுமியங்களை இனங்கண்டு வளர்த்துக்கொள்ளல்.

## 1.2. பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்

### 1.2.1 பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

| மொழி | பாடசாலை | தனிப்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| தமிழ் | 10856 | 3149 | 14005 |

**அட்டவணை 1**

### 1.2.2 பரீட்சார்த்திகளால் பெறப்பட்ட தரங்கள்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 442 | 4.07 | 10 | 0.32 | 452 | 3.23 |
| B | 1435 | 13.22 | 86 | 2.73 | 1521 | 10.86 |
| C | 3226 | 29.72 | 461 | 14.64 | 3687 | 26.33 |
| S | 4216 | 38.84 | 1247 | 39.60 | 5463 | 39.01 |
| W | 1537 | 14.16 | 1345 | 42.71 | 2882 | 20.58 |
| மொத்தம் | **10856** | **100.00** | **3149** | **100.00** | **14005** | **100.00** |

**அட்டவணை 2**

## 1.2.3 மாவட்டங்கள் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்ற தரங்கள்:

| மாவட்டம் | தோற்றியவர்களது எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர்கள் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர்கள் | | திறமைச் சித்தி (C) பெற்றவர்கள் | | சாதாரண சித்தி (S) பெற்றவர்கள் | | சித்தி (A+B+C+S) பெற்றவர்கள் | | சித்தி பெறாதவர்கள் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 323 | 7 | 2.17 | 31 | 9.60 | 81 | 25.08 | 135 | 41.80 | 254 | 78.64 | 69 | 21.36 |
| 2. கம்பஹா | 109 | 1 | 0.92 | 18 | 16.51 | 33 | 30.28 | 38 | 34.86 | 90 | 82.57 | 19 | 17.43 |
| 2. களுத்துறை | 183 | 15 | 8.20 | 39 | 21.31 | 40 | 21.86 | 72 | 39.34 | 166 | 90.71 | 17 | 9.29 |
| 4. கண்டி | 698 | 35 | 5.01 | 78 | 11.17 | 223 | 31.95 | 275 | 39.40 | 611 | 87.54 | 87 | 12.46 |
| 5. மாத்தளை | 171 | 11 | 6.43 | 18 | 10.53 | 45 | 26.32 | 78 | 45.61 | 152 | 88.89 | 19 | 11.11 |
| 6. நுவரெலியா | 1032 | 16 | 1.55 | 98 | 9.50 | 302 | 29.26 | 492 | 47.67 | 908 | 87.98 | 124 | 12.02 |
| 7. காலி | 50 | 2 | 4.00 | 6 | 12.00 | 9 | 18.00 | 19 | 38.00 | 36 | 72.00 | 14 | 28.00 |
| 8. மாத்தறை | 68 | 2 | 2.94 | 6 | 8.82 | 32 | 47.06 | 22 | 32.35 | 62 | 91.18 | 6 | 8.82 |
| 9. அம்பாந்தோட்டை | 13 | 0 | 0 | 5 | 38.46 | 5 | 38.46 | 3 | 23.08 | 13 | 100.00 | 0 | 0 |
| 10. யாழ்ப்பாணம் | 1534 | 77 | 5.02 | 202 | 13.17 | 427 | 27.84 | 563 | 36.70 | 1269 | 82.72 | 265 | 17.28 |
| 11. கிளிநொச்சி | 295 | 8 | 2.71 | 45 | 15.25 | 63 | 21.36 | 131 | 44.41 | 247 | 83.73 | 48 | 16.27 |
| 12. மன்னார் | 259 | 8 | 3.09 | 28 | 10.81 | 82 | 31.66 | 115 | 44.40 | 233 | 89.96 | 26 | 10.04 |
| 13. வவுனியா | 368 | 18 | 4.89 | 58 | 15.76 | 118 | 32.07 | 134 | 36.41 | 328 | 89.13 | 40 | 10.87 |
| 14. முல்லைத்தீவு | 312 | 14 | 4.49 | 37 | 11.86 | 90 | 28.85 | 117 | 37.50 | 258 | 82.69 | 54 | 17.31 |
| 15. மட்டக்களப்பு | 1165 | 45 | 3.86 | 149 | 12.79 | 289 | 24.81 | 435 | 37.34 | 918 | 78.80 | 247 | 21.20 |
| 16. அம்பாறை | 663 | 52 | 7.84 | 100 | 15.08 | 171 | 25.79 | 232 | 34.99 | 555 | 83.71 | 108 | 16.29 |
| 17. திருகோணமலை | 456 | 26 | 5.70 | 70 | 15.35 | 137 | 30.04 | 159 | 34.87 | 392 | 85.96 | 64 | 14.04 |
| 18. குருநாகல் | 225 | 8 | 3.56 | 50 | 22.22 | 80 | 35.56 | 64 | 28.44 | 202 | 89.78 | 23 | 10.22 |
| 19. புத்தளம் | 269 | 19 | 7.06 | 47 | 17.47 | 91 | 33.83 | 95 | 35.32 | 252 | 93.68 | 17 | 6.32 |
| 20. அனுராதபுரம் | 93 | 12 | 12.90 | 25 | 26.88 | 38 | 40.86 | 13 | 13.98 | 88 | 94.62 | 5 | 5.38 |
| 21. பொலன்னறுவை | 34 | 2 | 5.88 | 6 | 17.65 | 10 | 29.41 | 15 | 44.12 | 33 | 97.06 | 1 | 2.94 |
| 22. பதுளை | 430 | 32 | 7.44 | 87 | 20.23 | 145 | 33.72 | 136 | 31.63 | 400 | 93.02 | 30 | 6.98 |
| 23. மொனராகலை | 37 | 1 | 2.70 | 3 | 8.11 | 16 | 43.24 | 15 | 40.54 | 35 | 94.59 | 2 | 5.41 |
| 24. இரத்தினபுரி | 166 | 8 | 4.82 | 28 | 16.87 | 54 | 32.53 | 70 | 42.17 | 160 | 96.39 | 6 | 3.61 |
| 25. கேகாலை | 214 | 2 | 0.93 | 19 | 8.88 | 75 | 35.05 | 93 | 43.46 | 189 | 88.32 | 25 | 11.68 |
| **மொத்தம்** | **9167** | **421** | **4.59** | **1253** | **13.67** | **2656** | **28.97** | **3521** | **38.41** | **7851** | **85.64** | **1316** | **14.36** |

**அட்டவணை 3**

### 1.2.4 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91-100 | - | - | - | - |
| 81 - 90 | 24 | 0.17 | 14005 | 100.00 |
| 71 - 80 | 327 | 2.33 | 13981 | 99.83 |
| 61 - 70 | 1388 | 9.91 | 13654 | 97.49 |
| 51 - 60 | 2865 | 20.43 | 12266 | 87.58 |
| 41 - 50 | 3661 | 26.14 | 9401 | 67.13 |
| **31 - 40** | **3120** | **22.27** | **5740** | **40.99** |
| 21 - 30 | 1849 | 13.30 | 2620 | 18.71 |
| 11 - 20 | 683 | 4.87 | 771 | 5.51 |
| 01 - 10 | 86 | 0.61 | 88 | 0.63 |
| 00 - 00 | 2 | 0.01 | 2 | 0.01 |

**அட்டவணை 4**

**மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெறும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.**

**உதாரணம் :** 31 - 40 இற்கு இடைப்பட்ட வகுப்பாயிடையைக் கருதுவோம்.
இப்பாடத்தில் 31 - 40 என்ற வீச்சினுள் புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 3120 ஆகும். இது 22% ஆகும். 40 அல்லது அதைவிடக் குறைவாகப் புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 5740 ஆவதோடு அது 40.99% ஆகும்.

## 1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

### 1.3.1 வினாத்தாள் I இல் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள விதம்.




இவ்வரைபுக்கமைய தகவல்களைப் பெறுவதற்கான உதாரணம் கீழே தரப்பட்டுள்ளது.

உதாரணம் - கட்டாய வினாக்களான 1 ஆம் 2 ஆம் வினாக்களிற்கு 99% ஆனவர்கள் விடையளித்துள்ளனர். பகுதி II இல் உள்ள தெரிவு வினாக்களில் வினாக்கள் 5, 7 ஆகியவற்றை ஏறக்குறைய 40% ஆனோர் தெரிவு செய்துள்ளனர்.

**வரைபு 2** - (RD/16/02/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

### 1.3.2 வினாத்தாள் I இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்




இங்கு 1 ஆம் வினாவுக்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 24 ஆகும். இவ்வரைபின்படி அப்புள்ளிகளில் 76%-100% என்ற வீச்சில் அதாவது 19-24 இற்கிடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொண்டோர் 5% ஆகவும் அதேபோன்று 24 புள்ளிகளில் 00%-25% என்ற வீச்சில் அதாவது 0 முதல் 6 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டோர் 28% ஆகவும் உள்ளனர்.

**வரைபு 3** - (RD/16/02/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

### 1.3.3 வினாத்தாள் I - பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு



### 1.3.4 வினாத்தாள் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்




இவ்வினாப்பத்திரத்தில் பகுதி I இன் கட்டாய வினாக்களான முதல் மூன்று வினாக்களுக்கும் முறையே 100%, 95%, 97% ஆனோர் விடையளித்துள்ளனர். அத்தோடு பகுதி II இன் “அ” பிரிவு தெரிவுவினாக்களில் 4 ஆம் வினாவுக்கு 90% ஆனோரும் 5 ஆம் வினாவுக்கு 7% ஆனோரும் 6ஆம் வினாவுக்கு 3% ஆனோரும் விடையளித்துள்ளனர். அதேவேளை பகுதி II இன் “ஆ” பிரிவு தெரிவுவினாக்களில் 7ஆம் வினாவுக்கு 78% ஆனோரும் 8ஆம் வினாவுக்கு 15% ஆனோரும் விடையளித்துள்ளனர்.

**வரைபு 2** -(RD/16/02/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

### 1.3.5 வினாத்தாள் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்




இங்கு முதலாம் வினாவுக்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 30 ஆகும். இவ்வரைபின்படி அப்புள்ளிகளைப் 76%-100% என்ற வீச்சில் அதாவது 24 - 30 இற்கிடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொண்டோர் 3% ஆவர். அத்தோடு 00% - 25% என்ற வீச்சில் அதாவது 0-8 புள்ளிகளைப் பெற்றோர் 41% ஆவர்.

15 புள்ளிகளைக் கொண்ட தெரிவு வினாவான 8ஆம் வினாவைத் தெரிவு செய்தோரில் 76%-100% என்ற வீச்சில் 6% ஆனோரும் 00%-25% என்ற வீச்சில் 63% ஆனோரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இது கடினத்தன்மை வாய்ந்த ஒரு வினாவாக அமைந்துள்ளது.

**வரைபு 2** - (RD/16/02/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

### 1.3.6 வினாத்தாள் II - வினா I (அ) இற்குரிய பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

**க. பொ. த. (உ.தர)ப் பரீட்சை - 2018**
**72 - தமிழ்- வினாத்தாள் II - பகுதி I [ வினா 1 (அ) ]**
**வினாக்களுக்கான இலகுச்சுட்டி**




வரைபு 4.1 : (RD/16/04/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.)
உ-ம் : வினாத்தாள் II பகுதி I வினா 1 (அ) இல் 1.12 இன் இலகுச்சுட்டி 0.75 ஆகும். இதனால் கருதப்படுவது 75% ஆன பரீட்சார்த்திகள் இவ் வினாவிற்குரிய சரியாக துலங்கியுள்ளனர் என்பதாகும். இது அவ்வினாவின் இலகுதன்மை எனப்படுகின்றது. இதன்படி ஆகக் குறைந்த இலகுதன்மையைக் கொண்ட வினா 1.18 ஆவதோடு அதன் இலகுதன்மை 8% ஆகும்.

## 1.3.7 வினாத்தாள் II - பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு



**பாகம் II**

## 2.0 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

### 2.1 வினாத்தாள் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

#### 2.1.1 வினாத்தாள் I - கட்டமைப்பு

**நேரம் : 03 மணித்தியாலம்** **மொத்தப் புள்ளிகள் : 100**

★ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

பகுதி I : 2 கட்டாய வினாக்களைக் கொண்டது.

பகுதி II : 6 வினாக்களில் எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

★ எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

## 2.1.2 வினாத்தாள் I - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடை அளித்தமை தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள், ஆலோசனைகள்

### பகுதி I

1. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i) அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினும்
உழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றாரலன்.

(அ) இச்செய்யுட் பகுதியில் பாரியின் நாட்டுவளம் காட்டப்படுமாற்றை விளக்குக.

(ஆ) இதில் பாரியின் வீரம் விளங்குமாற்றைத் தெளிவுபடுத்துக.

(இ) இதில் கையாளப்பட்டுள்ள உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(ii) விண்டொட நிவந்த கோயில் வேந்தர்தம் வேந்தன் தன்னைக்
கண்டிலன் வினவக் கேட்டான் கைகயி கோயி னண்ணித்
தொண்டைவாய் மடந்தை மாரிற் சொல்லமற் றவருஞ் சொல்லப்
பெண்டிரிற் கூற்ற மன்னாள் பிள்ளையைக் கொணர்க வென்றாள்.

(அ) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.

(ஆ) இச்செய்யுளில் இடம்பெறும் உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(இ) தசரதன் பெருமையும் கைகேயி சிறுமையும் இச்செய்யுளில் உணர்த்தப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக. (24 புள்ளிகள்)

**வினா இலக்கம் 1**

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

(i) (அ)
- உழவர்களால் உழுது விளைவிக்கப்படாத நான்கு விளைபயன்களை உடையது.
  - சிறிய இலைகளையுடைய மூங்கிலில் நெல் விளைதல்.
  - இனிமையான சுளைகளையுடைய பலாக்கனி பழுத்து உதிர்தல்.
  - செழிப்பான கொடிகளில் வள்ளிக்கிழங்கு விளைதல்.
  - தேன் அருவியாகச் சொரிதல்.
- வானத்தைப் போன்று பரந்து விரிந்த மலைப்பிரதேசம்.
- விண்மீன்களைப் போன்று நிறைந்துள்ள நீர்ச்சுனைகள்.

(04 புள்ளிகள்)

(ஆ)
- பெருமை வாய்ந்த முரசுடைய மூவேந்தர்கள் முற்றுகையிட்டாலும் வெல்லப்பட முடியாதவன்.
- மரங்கள்தோறும் யானைகளைக் கட்டி நிறுத்தி வைத்தாலும், இடம் முழுவதும் தேர்ப்படைகளைப் பரப்பி வைத்தாலும் வெல்ல முடியாதவன்.
- வாள் வலிமை காட்டுதல் முதலான வேறு எம்முயற்சிகளை மேற்கொண்டாலும், வெல்ல முடியாதவன்.

(04 புள்ளிகள்)

(இ)
- வான்கண்அற்று அவன் மலையே
  - உவமானம்: வானம்
  - உவமேயம்: மலை
  - பொதுத்தன்மை: உயரமும் அகலமும் உடையது.
- மீன்கண்அற்று அதன் சுனையே
  - உவமானம்: விண்மீன்
  - உவமேயம்: நீர்ச்சுனை
  - பொதுத்தன்மை: பன்மை

(04 புள்ளிகள்)

(ii) (அ) தசரதன், கைகேயியின் அந்தப்புரத்தில் இருப்பதை உணர்ந்த சுமந்திரன், அங்கு சென்றபோது, இராமனை அழைத்து வருமாறு அவனிடம் கைகேயி கூறுதல்.

(04 புள்ளிகள்)

(ஆ)
- தொண்டைவாய்
  - உவமானம் : கொவ்வைக்கனி
  - உவமேயம் : வாய்
  - பொதுத்தன்மை : சிவந்த நிறம்
- கூற்றம் அன்னாள்
  - உவமானம்: கூற்றம் (யமன்)
  - உவமேயம்: கைகேயி
  - பொதுத்தன்மை: கொடுமை

(04 புள்ளிகள்)

(இ) தசரதன் பெருமை
- விண்ணை முட்டுமாறு உயர்ந்த அரண்மனை உடையவன்.
- அரசர்க்கு அரசன்.

கைகேயியின் சிறுமை
- யமனை ஒத்த கொடியவள்.

(04 புள்ளிகள்)

(12 + 12 = 24 புள்ளிகள்)

**1 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**




வினாப்பத்திரம் I இன் பகுதி I கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 24 ஆகும்.
இதில் 00 - 06 ஆயிடையில் 28% ஆனோர்
07 - 12 ஆயிடையில் 49% ஆனோர்
13 - 18 ஆயிடையில் 18% ஆனோர்
19 - 24 ஆயிடையில் 5% ஆனோர்
எனும் வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 13 அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளோர் 23% ஆனோர் ஆவர். பரீட்சார்த்திகளில் 77% ஆனவர்கள் வினாவுக்குரிய மொத்தப் புள்ளியில் அரைவாசிக்கும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.




இவ்வினா கட்டாய வினாவாகும். இரண்டு பகுதிகளுள் ஒவ்வொன்றும் மூன்று உபபிரிவுகளைக் கொண்டமைந்துள்ளன. இரண்டாவது பகுதியில் (அ), (ஆ), (இ) ஆகிய உபபிரிவுகளில் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

(அ)
- பாடலில் நாட்டு வளத்தை இனங்கண்டு விளக்கி எழுதாமை.
- வினாவில் எதிர்பார்க்கப்பட்ட முழு விபரங்களையும் எழுதத் தவறியமை.
- அணியை இனங்கண்டாலும் பொருத்தமாக விளக்கத் தவறியமை.

(ஆ) குறித்த செய்யுள் இடம்பெற்ற சந்தர்ப்பத்தை இனங்கண்டு எழுத முடியாமை.
- உவமைகள் இரண்டு இடம்பெற்ற போதிலும் ஒன்றினையே இனங்கண்டு விளக்கியுள்ளமை.
- தசரதனின் பெருமை, கைகேயியின் சிறுமை பற்றி எழுதியபோதிலும் அவை உணர்த்தப்பட்டுள்ள விதம் பற்றி விளக்கத் தவறியமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

(அ)
- பாடற் பொருளை விளங்கிக் கொள்வதோடு சொல்லப்படும் விடயத்தை நுட்பமாக அறிவதற்கு வழிப்படுத்தி எடுத்துக்காட்டப்படும் விடயங்களைத் தொகுத்து நோக்குவதற்கும் வழிப்படுத்துதல்.
- பாடல்களில் அணிகளை இனங்காணவும் அவற்றின் பொருத்தப்பாடு பற்றி விளக்குவதற்கும் பயிற்சியளித்தல்.

(ஆ)
- பாடல்களின் பொருள், பாடப்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- பாடல்களில் இடம்பெறும் பாத்திரங்களின் குணவியல்புகளையும், செயல்களையும் சொற்றொடராலும் வாக்கியத்தாலும் கவிஞர்களால் எடுத்துக்காட்டப்படும் முறையை விளங்கிக்கொள்ளப் பயிற்சியளித்தல்.

## வினா இலக்கம் - 02

**2.** 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) அருளின் முதலோன், அன்புடையோன்!
அகிலம் புரக்கும் எங்கோமான்
திருவார் மாந்தர் திருநாவில்
தேனாம் இனிய மொழிவைத்தோன்!
உரவோன், அன்னான் திருநாமம்
உன்னி, இதனை ஓதுகிறேன்!

செய்ய கருணைச் செழுஞ் சோதி;
சிந்தை நீறி உழல்வாரும்
உய்ய அருளும்! உள்நொந்தார்
உருக அருளும்! ஒருகுரலில்
வையம் கொள்ள பேரரசும்
வழுத்தி இரக்கும் ஒரு சீமான்!
ஐய! கருணை யங்கடலில்
ஆடா தானின் பாடென்னே ?

தன்னில் தானாம் நிலையுடையான்!
தனியோர் ஆட்சி வலியுடையான்!
தன்னை உணர்வார் அருகமைவான்!
தனக்கே உரியார் துயர் களைவான்!
அன்னோன் ஆற்றல் ஆழத்தை
அளந்தார் யாரே ? அளப்பாரே ?
ஒன்று மற்ற தோன்றாலே
உலகைச் செய்தான் என் இறையே!

திரையின் பின்னால் நோக்குகிறேன்!
தீங்கின் பாலே திளைப்பார்க்குத்
துரும்பைக் கொண்டே பெரும் துன்பம்
தொடரச் செய்யும் மாவல்லோன்!
இருமை உலகும் அவனறிவில்
இரண்டு துளிகள் எனலாமே!
அருமை இறைவன் புகழுங்கி
அறிவாம் கைக்கு வசமாமோ ?

(i) இக்கவிதையில் கவிஞர் இறைவனின் புகழை எவ்வாறு எடுத்துரைக்கிறார் என்பதை விளக்கு

(ii) பின்வரும் கவிதை வரிகளின் பொருளையும் கவிநயத்தையும் தெளிவுபடுத்துக.

(அ) ஐய! கருணை யங்கடலில்
ஆடா தானின் பாடென்னே ?

(ஆ) அருமை இறைவன் புகழுங்கி
அறிவாம் கைக்கு வசமாமோ ?

(iii) பின்வரும் வரிகளின்மூலம் இறைவனின் எல்லையற்ற ஆற்றலையும் அறிவையும் கவிஞ புலப்படுத்துமாற்றை விளக்குக.

(அ) ஒன்று மற்ற தொன்றாலே
உலகைச் செய்தான் என் இறையே!

(ஆ) இருமை உலகும் அவனறிவில்
இரண்டு துளிகள் எனலாமே!

(iv) தமிழ்ப் பக்தி இலக்கிய மரபில் இக்கவிதை பெறும் இடம் பற்றி மதிப்பிடுக.

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(2) (அ) (i) அருளின் முதல்வன், அன்புடையவன், அகிலத்தைப் பாதுகாப்பவன்,மனிதர்களுக்கு மொழியை அருளியவன், கருணையின் ஒளி, எல்லோருக்கும் அருள் பாலிப்பவன், கருணைக்கடல், தானாகவே நிலைபெற்றவன்,ஆட்சி வலிமை பெற்றவன், அவனை உணர்ந்தவர்களின் அருகில் இருப்பவன்,அவனை நம்பியவர்களின் துயரைக் களைபவன், தீங்கு செய்பவர்களுக்குத் துரும்பைக் கொண்டே துன்பம் தரக் கூடியவன், அவனுடைய ஆற்றலை யாராலும் அளவிட முடியாது என்றெல்லாம் இறைவனின் அன்பு, கருணை, ஆற்றல் என்பவற்றைக் கவிஞர் புகழ்ந்து கூறுகின்றார்.

(04 புள்ளிகள்)

(ii) (அ) பொருள் : இறைவனின் கருணையாகிய அழகிய கடலில் நீராடித் திளைக்காதவனின் கதி என்னே!

கவிநயம் : இறைவனின் கருணையை அழகிய கடலாக உருவகித்து அதில் நீராடித் திளைக்காதவனின் கதி என்னே என்று வியப்பதன் மூலம் இறைவனின் பெருமையையும், அதை உணராதவர்களின் கதியையும் புலப்படுத்துவது கவிஞரின் கவியாற்றலைக் காட்டுகிறது.

(ஆ) பொருள் : இறைவனுடைய புகழ் என்னும் அங்கி அறிவு என்னும் கைக்கு வசமாகுமா (இறைவனின் புகழை அறிவினால் விளக்க முடியாது)

கவிநயம் : இறைவனின் புகழை அங்கி (ஆடை)யாகவும், அறிவை கையாகவும் உருவகித்து இறைவனின் புகழ் அறிவுக்கு அகப்படுமா என்று கேட்பதன் மூலம் இறைவனின் புகழ் அறிவால் விளக்க முடியாதது என்பதை வலியுறுத்துவது.

(04 புள்ளிகள்)

(iii) (அ) ஒன்றுமற்ற வெற்றுவெளியிலிருந்து (இல்லாத ஒன்றிலிருந்து) இறைவன் இந்த உலகத்தைச் சிருஷ்டித்தான் என்பதன் மூலம் இறைவனின் எல்லையற்ற ஆற்றலை கவிஞர் வெளிப்படுத்துகின்றார்.

(ஆ) இம்மை உலகும், மறுமை உலகும் இறைவனுடைய அறிவின் இரண்டு துளிகள் என்பதன் மூலம் இறைவனின் எல்லையற்ற அறிவை கவிஞர் புலப்படுத்துகின்றார்.

(04 புள்ளிகள்)

(iv) தமிழ்ப்பக்தி இலக்கியங்கள் (மதம் கடந்த நிலையில்) இறைவனின் அன்பு, கருணை, ஆற்றல் என்பவற்றைப் புகழ்ந்து பாடுகின்றன. அத்தகைய இறைவனின் அடி சேருவதையே வாழ்வின் குறிக்கோளாக வலியுறுத்துகின்றன. அத்தகைய பக்தி இலக்கிய மரபில் இக்கவிதையும் முக்கிய இடம்பெறுகின்றது.

(04 புள்ளிகள்)

(ஆ) அன்று மரங்களே சீவவில்லை. ஒரு சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். புறப்படும்போது எதிரில் கண்ட பையனிடம் தான் பின்னேரம் வராவிட்டால் மரங்களைச் சீவிவிடும்படி சின்னத்தம்பிக்குச் செய்தி அனுப்பினான். எங்கே செல்கிறோம் என்ற எண்ணமேயில்லாது சைக்கிளை உழக்கினான். வேகமாக உழக்கினான். அவனையறியாமலே சிந்தனை உறுத்த, வேகம் இடையிடை தடைப்பட்டது. எதிரே வரும் வாகனங்களையே கவனித்து ஒதுக்கி ஓட முடியவில்லை. நெஞ்சம் இடையிடை விம்மிப் பொருமி உடைந்தது. கண்கள் கலங்கி எதிரே யாவும் மங்கலாகத் தெரிந்தன.

பலாலியை நோக்கி ஓடிக் கொண்டிருப்பது நினைவில் வந்தது. பனைக்கூடல் ஒன்றைத் தாண்டியபோது பிளா ஒன்று தொங்கியதைக் கண்டான். கள்ளுக் கொட்டில் எங்கே என்று சுற்றுமுற்றும் பார்த்தான். பனைக்கூடலின் உள்ளே ஒரு குடிசையின் முன்னிலையில் முட்டிகள் இருப்பது தெரிந்தது. இறங்கிச் சைக்கிளை உருட்டியபடியே நடந்தான்.

கள்ளிறக்கியபோதும் அவன் குடிப்பது மிக அரிது. மயக்கம் வரும்வரை குடித்து மனத்துன்பத்தை மறக்க வேண்டும்போல் தோன்றியது.

மன அருவருப்போடு கண்ணை மூடிக் கொண்டே கள்ளைக் குடித்தான். இன்பத்திற்கு மதுவருந்துவதுபோல அவன் எண்ணிக்கொள்ளவில்லை. நோய் தீர மூக்கைப் பிடித்துக் கொண்டு மருந்தை விழுங்கும் குழந்தை நிலையிலேயே இருந்தான்.

சிறிது நேரம் வானத்தில் பறப்பதுபோன்ற ஓர் உணர்ச்சி. மீண்டும் சைக்கிளில் ஏறி உழக்கிக் கொண்டேயிருந்தான்.

கீரிமலை வந்துவிட்டது. சைக்கிளை ஓரிடத்தில் வைத்து உடுப்புக்களையும் அதில் கட்டிவிட்டு கடலிலே இறங்கி நீந்தினான். தலையை தண்ணீரிலே தோய்த்துத் தோய்த்து எடுத்தான். மனநிலை மாறவில்லை. கள் வெறி முற்றாக முறிந்ததும் மீண்டும் மனநிலை மோசமடைந்து வந்தது. காலை தொடக்கம் நண்பகலாகியும் பசியே எடுக்கவில்லை. இதுவரையில் பிரேதச் சடங்குகள் முடிந்திருக்குமோ ?

உலகத் துன்பமெல்லாம் தன் தலையில் சேர்ந்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. வேட்டியைக் கட்டி சேட்டைப் போட்டுக்கொண்டு மீண்டும் சைக்கிளில் ஏறினான்.

கடற்கரையோரமாகத் தென்னந் தோட்டத்திலிருந்த கள்ளுக் கொட்டில் ஒன்றில் நுழைந்தான். மீண்டும் விழுங்க முடிந்தளவை வயிற்றுள் செலுத்தினான். மன அமைதி ஏற்பட்டதுபோன்ற ஓர் உணர்வு. மீண்டும் சைக்கிளில் ஏறினான். உடல் சோர்ந்தபோதும் சிந்தனை சோரவில்லை. மயக்கநிலை சிறிது தெளியத் தொடங்கியதும் மீண்டும் சரஸ்வதியின் நினைவே தலையெடுத்தது. இதுவரையில் சுடலைக்கு எடுத்துச் சென்றிருப்பார்கள். கொள்ளிக் கட்டையில் சவப்பெட்டியை வைத்திருப்பர்.

யாழ்ப்பாணப் பட்டணத்திற்கு வந்து சேர்ந்து விட்டான். சாராயத் தவறணைக்குச் சென்று குடிக்க முடிந்தவரை குடித்தான். சைக்கிளை உருட்டிக்கொண்டே முனியப்பர் கோவில் வரை நடந்தான். சைக்கிளை வைத்துவிட்டு பூவரசமர நிழலில் சோர்ந்துபோய் உட்கார்ந்தான்.

இதுவரையில் கொள்ளி வைத்திருப்பார்கள்.

எல்லோரும் சுடலையை விட்டுக் கிளம்பியிருப்பர். தீ மூண்டு எரிந்து கொண்டிருக்கும். அதன் சுவாலை நாக்குகள் சரஸ்வதியையும் சிசுவையும் பசியாறிக் கொண்டிருக்கும்!

மீண்டும் நினைவு வந்தபோது பொழுது சாய்ந்துவிட்டது. எதிரே தெரிந்த சினிமாத் தியேட்டரின்முன் ஒரே கூட்டம். அந்தக் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டான். தனியே ஓடிவந்த ஆறு கடலுடன் கலப்பதுபோல் மனித கூட்டத்துடன் சேர்வதிலும் ஒரு சாந்தி இருப்பதாக உணர்ந்தான்.

தியேட்டருக்குள் ஒரே கூட்டம். வியர்வை, கலகலப்பு, கைதட்டல்கள், திரையில் காட்சிகள் மாறி மாறி வந்து கொண்டிருந்தன. கடலலையிடையே அகப்பட்டு மறைந்து மறைந்து தோன்றும் தெப்பக் கட்டைபோல சரஸ்வதியின் நினைவும் இடையிடை மேலெழுந்துகொண்டிருந்தது.

(i) சரஸ்வதியின் தற்கொலை செல்லத்துரையன்மீது ஏற்படுத்திய தாக்கம் பற்றிய இச்சித்திரிப்பின் மூலம் ஆசிரியர் எதை உணர்த்துகிறார் என்பதை விளக்குக.

(ii) செல்லத்துரையனின் மனப்போராட்டத்தை வெளிப்படுத்துவதற்கு ஆசிரியர் கையாளும் விபரண உத்தியின் சிறப்பை விளக்குக.

(iii) செல்லத்துரையனின் மனதில் சரஸ்வதியின் இறுதிக்கிரியை பற்றி அடிக்கடி தோன்றும் எண்ணம், அவனுடைய மனநிலையை எவ்வாறு வெளிப்படுத்துகின்றது என்பதைத் தெளிவுபடுத்துக.

(iv) ஆசிரியரின் மொழிநடை பற்றிக் கருத்துரைக்குக. (16 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(ஆ) (i) செல்லத்துரையனுக்கும் சரஸ்வதிக்குமிடையே இரகசியமான காதல் உறவு இருந்தது என்பதை ஆசிரியர் உணர்த்துகிறார். சரஸ்வதியின் தற்கொலைக்கு அந்த உறவும் அதன் மூலம் அவள் கருவுற்றதும் காரணம் என்பதும் உணர்த்தப்படுகிறது. சாதி மாறிய காதலை ஏற்றுக்கொள்ளாத சாதியமைப்பின் இறுக்கமும், அதன் குரூரமும் உணர்த்தப்படுகின்றன.

(04 புள்ளிகள்)

(ii) செல்லத்துரையனின் ஒவ்வொரு செயற்பாட்டையும் விபரிப்பதன் மூலம் அவனது குற்றவுணர்வையும், மனப்போராட்டத்தையும் ஆசிரியர் சிறப்பாகச் சித்திரிக்கின்றார்.

- குறிக்கோள் இல்லாமல் மனம்போனபடி சைக்கிளில் ஓடுவது.
- எல்லைமீறி கள் குடிப்பது.
- கீரிமலையில் தலைமுழுகுவது போன்ற செயல்கள்.

(04 புள்ளிகள்)

(iii) சரஸ்வதியின் இறுதிக் கிரியை பற்றி செல்லத்துரையன் அடிக்கடி நினைக்கிறான். அவன் அங்கு இல்லாவிட்டாலும் இப்போது என்ன நடந்திருக்கும் என்ற எண்ணம் அவன் நினைவில் தோன்றுகின்றது. சரஸ்வதியும், அவள் வயிற்றுச் சிசுவும் அவன் எண்ணத்தை ஆக்கிரமித்திருப்பதை இது வெளிப்படுத்துகின்றது.

(04 புள்ளிகள்)

(iv) ஆசிரியர் ஒரு விபரண நடையைக் கையாண்டுள்ளார். சிறுசிறு சம்பவங்களாக விபரிக்கின்றார். அதற்கேற்ப சிறுசிறு வாக்கியங்களைப் பயன்படுத்துகின்றார். வாசிப்பவரின் மனதில் மனக்காட்சிகளை உருவாக்கும் விபரணநடை சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(04 புள்ளிகள்)

($04 \times 04 = 16$ புள்ளிகள்)

**2 வது வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




இந்த வினா இரண்டு தெரிவுகளைக் கொண்ட கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளிகள் 16 ஆகும்.

இதில் 00 - 04 ஆயிடையில் 25% ஆனோர்
05 - 08 ஆயிடையில் 50% ஆனோர்
09 - 12 ஆயிடையில் 22% ஆனோர்
13 - 16 ஆயிடையில் 03% ஆனோர்
எனும் வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 75% ஆனோர் 8 புள்ளிகளுக்கு குறைவாகவே புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா இரண்டு தெரிவுகளைக் கொண்ட ஒரு கட்டாய வினாவாகும். ஒரு தெரிவு செய்யுட்பகுதி தொடர்பான வினாவாகவும் மற்றைய தெரிவு உரைநடைப்பகுதி தொடர்பான வினாவாகவும் அமைகின்றன. இரண்டு தெரிவும் தலா நான்கு பிரிவுகளைக் கொண்டதாக அமையும். இவ்வருடம் முதலாவது தெரிவில் அடங்கும் நான்கு வினாக்களுள் இரண்டு ((ii), (iii)) மேலும் இரண்டு உபபிரிவுகளைக் கொண்டதாக அமைந்தன. இரண்டாவது தெரிவு வழக்கம் போலவே அமைந்துள்ளது.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

**கவிதைப்பகுதி**

- இறைவனின் புகழை எழுதினாலும் எடுத்துரைக்கும் விதம் பற்றி எழுதத் தவறியமை.
- பெரும்பாலான மாணவர்கள் கவிதை வரிகளையே மீண்டும் பொருளாக எழுதியமை பொருள் எழுதியவர்களும் கவிஞரின் கவிநயத்தை விளக்கி எழுதாமை.
- “ஒன்று மற்ற தொன்றாலே” என்ற தொடரை பொருளுக்கேற்ற விதத்தில் பதம் பிரித்தறியும் திறன் இல்லாமையால் சரியான விடை எழுத இடர்ப்பட்டமை.
- பெரும்பாலான மாணவர்கள் பக்தி இலக்கிய மரபை இப்பாடலோடு தொடர்புபடுத்தி எழுத இடர்ப்பட்டமை.

**உரைநடைப்பகுதி**

- செல்லத்துரைக்கும் சரஸ்வதிக்கும் இடையிலான மானசிகமான காதலை வெளிப்படுத்தத் தவறியமை.
- செல்லத்துரையின் மனப் போராட்டத்தை விவரித்துள்ளபோதும் ஆசிரியர் கையாண்ட உத்தி பற்றி விளக்கத் தவறியமை.
- நனவோடை உத்தியில் சம்பவத்தை பின்னோக்கி நினைப்பதாக வெளிப்படுத்தவேண்டியதை முன்வைக்கத் தவறியமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- பாடப்பகுதிகளைத் தெளிவாக விளங்கி, கிரகித்து அவை தொடர்பாக தொடுக்கப்படும் வினாக்களுக்குத் துல்லியமாக விடையளிப்பதற்கான பயிற்சிகளை வழங்குதல்.
- வினாவைத் தெளிவாகக் கிரகித்து, வினாவிற்கேற்ப விடையைச் சுட்டிப்பாக எழுதும் ஆற்றலை வளர்த்தல்.
- பாடப்பரப்பிலுள்ள விடயங்களை நயக்கவும் நயந்தவற்றை நயமுற விளக்கவும் பயிற்சி வழங்குதல்.
- இப்பகுதி கிரகித்தல், நயத்தல், திறனாய்தல் ஆகிய மூன்றையும் உள்ளடக்கியதாக அமையும் பகுதியாதலால் மூன்று நோக்கங்களையும் அடைவதற்குப் பயிற்சியளித்தல்.
- இலக்கியங்களைக் கற்பிக்கும்போது படைப்பாளிகள் எடுத்துக்கொண்ட பாடுபொருள், கையாண்ட உத்திகள், மொழிநடை ஆகியனவற்றை மாணவர்கள் விளங்குவதற்கு வழிப்படுத்தல்.

**3. வினைசெயல்வகை** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு,

(அ) வினைசெய்யும் திறம், வலியினது சிறப்பு, வலிமைகொண்டு செய்யும் திறம் ஆகியனவும்

(ஆ) ஒப்பான் செய்யும் திறமும்

(இ) மெலியான் செய்யும் திறமும்

விளக்கப்பட்டிருக்குமாற்றினை எடுத்துக்காட்டுவதுடன்,

(ஈ) அவ்வதிகாரத்தில் கையாளப்பட்டுள்ள உவமைகளை இனங்கண்டு விளக்குக. (20 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

3. (அ) வினை செய்யும் திறம்.

- ஆராய்ந்து துணிந்த செயலை விரைந்து செய்யாது காலதாமதம் செய்வது தீமை தரும்.
- காலம் தாழ்த்திச் செய்யத்தக்கவற்றை காலம் தாழ்த்தியே செய்தல் வேண்டும்; காலம் தாழ்த்தாது செய்ய வேண்டியவற்றில் கால தாமதம் கூடாது.

வலியினது சிறப்பு

- இயலும் இடமெல்லாம் வினை செய்தல் நன்று; இயலாத காலத்து, இயலும் இடம் பார்த்து அதனைச் செய்தல் வேண்டும்.

வலிமைகொண்டு செய்யும் திறம்

- செய்யத் தொடங்கிய செயல், கொள்பகை ஆகிய இரண்டின் குறை, ஆராய்ந்து பார்த்தால் தீயின் குறைபோல வளர்ந்து கெடுக்கும்.

(05 புள்ளிகள்)

(ஆ) ஒப்பான் செய்யும் திறம்

- (வேண்டிய) பொருள் (ஏற்ற) கருவி, (தக்க) காலம், (மேற்கொண்ட) தொழில், (பொருத்தமான) இடம் ஆகிய ஐந்தையும் மயக்கம் அற எண்ணிய பின் தொழிலைத் தொடங்க வேண்டும்.
- தொடங்கும் தொழிலை முடிக்குமாறு, அதற்கு வரும் இடையூறு, முடிந்தால் உண்டாகும் பயன் என்பவற்றை ஆராய்ந்து செய்ய வேண்டும்.
- தொழிலைச் செய்யுமிடத்து அத்தொழிலின் உண்மை நிலையறிந்து, முன்பு நடத்தி வந்தவரின் கருத்தையொட்டியே அதனைச் செய்தல் வேண்டும்.

(05 புள்ளிகள்)

(இ) மெலியான் செய்யும் திறம்

- தொடங்கிய தொழிலால் அதுபோன்ற பிறிதொரு தொழிலையும் முடித்துக் கொள்ளல், மதம் கொண்ட யானையால் அது போன்ற பிறிதொரு யானையைக் கட்டுதல் போன்றது.
- தம் சுற்றத்துக்கு நல்லவை செய்தலினும் பகைவரைப் பொருந்தி நட்பாகக் கொள்ளுதலை விரைந்து செய்தல் வேண்டும்.
- வலிமை குறைந்தவர்கள், தம்மைச் சேர்ந்தவர்கள் அஞ்சித் தம்மைவிட்டு நீங்கின் அடியோடு கெடுவர். ஆதலால் (அவ்வாறு கேடு நேராதபடி) வலியாரைப் பணிந்து சமாதானம் செய்தல் வேண்டும்.

(05 புள்ளிகள்)

(ஈ) உவமைகள்

- தொடங்கிய செயல், கொண்ட பகை ஆகியவற்றை முழுவதுமாக முடிக்காது அரை குறையாக விடல், தீயை முற்றாக அவிக்காது விடுதல் போன்றது ஆபத்தானது.
- தொடங்கிய தொழிலால் இன்னொரு தொழிலையும் முடித்துக் கொள்ளல், மதம் கொண்ட யானையால் மற்றொரு யானையைக் கட்டுதல் போன்றது.
  (இன்னொரு காரியத்தை முடிக்கவல்ல உபாயத்தை எண்ணிச் செய்க.)

(05 புள்ளிகள்)

**3 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**




இவ்வினா தெரிவுவினாவாக அமைந்துள்ளது. வினாவிற்கான மொத்தப்புள்ளிகள் 20 ஆகும்.
இதில் 00 - 05 ஆயிடையில் 14% ஆனோர்
06 - 10 ஆயிடையில் 17% ஆனோர்
11 - 15 ஆயிடையில் 35% ஆனோர்
16 - 20 ஆயிடையில் 34% ஆனோர்
எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இதில் 69% மான பரீட்சார்த்திகள் 50% இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 4 உபபிரிவுகளைக் கொண்டது. 4 உபபிரிவுகளுக்கும் 51% இற்கும் அதிகமானோர் விடையளித்துள்ளனர். பிரிவு (அ) இலகுதன்மை கூடியதாகவும் (71%), பிரிவு (ஈ) இலகுதன்மை குறைந்ததாகவும் (51%) காணப்படுகின்றது.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- திருக்குறளையும் அதன்பொருளையும் தெளிவாக விளங்கி, செவ்வையான முறையில் விடையளிக்கத் தவறியமை.
- வகைப்பாட்டு வினாக்களுக்குப் பொருந்தும் வகையில் விடையளிக்கத் தவறியமை.
- பயின்றுள்ள உவமை அணிகளை இனங்கண்டு விளக்க முடியாமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- திருக்குறளின் அதிகாரங்கள் தொடர்பான கருத்தியலை விளக்குதல்.
- உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் கூறப்படும் விடயங்களை வகுத்து, தொகுத்து எழுதும் ஆற்றலை மேம்படுத்துதல்.
- எடுத்துக்கொண்ட பொருளை வலியுறுத்துவதற்குக் கையாண்ட அணிகளின் பொருத்தப்பாடு பற்றி விளக்குதல்.
- குறளிற்குப் பொருள் என்ற ரீதியில் எழுதாது பொருளை விளங்கி கட்டமைப்பான விடைகளை எழுதுவதற்கு வழிப்படுத்துதல்.

4. சிலப்பதிகாரம் துன்பமாலையில்

(அ) கோவலன் கொலையுண்ட செய்தியைக் கண்ணகி அறிந்துகொண்ட சந்தர்ப்பத்தினை விவரிக்குக.

(ஆ) கோவலன் கொலையுண்டமை கேட்ட கண்ணகியின் பதகளிப்பு சித்திரிக்கப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

(இ) கணவரை இழந்த கைம்பெண்கள் அன்று கடைப்பிடித்த நோன்புகள்மூலம் தன்னை மாய்த்துக்கொள்ளக் கண்ணகி உடன்படாதது ஏன் ?

(ஈ) குற்றமற்ற கோவலன்மீது சுமத்தப்பட்டது வீண்பழி என்பது எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது ?

(20 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

4. (அ) குரவைக் கூத்து முடிந்தபின், வையை ஆற்றில் நீராட மாதரி சென்றவேளை, ஊர் அரவம் கேட்டுவந்த பெண்ணொருத்தி பேசாது நின்றநிலை கண்டு பலரும் அவளைச் சூழ்ந்து, நடந்ததை அறிய முயல்கையில், மதுரை நகருட் சென்ற தன் கணவன் இன்னமும் திரும்பாததால் வருந்திநின்ற கண்ணகி, கேள்விப்பட்ட செய்தியைக் கூறுமாறு வினவ, அவள்,"அரண்மனையிற் சிலம்பினைத் திருடிய கள்வன் என்று ஊர்காவலர் உன் கணவனைக் கொலை செய்தார்கள்" என்றாள்.

(05 புள்ளிகள்)

(ஆ)
- ஆவேசம்கொண்டு வேகமாக எழுந்தாள்; நிலவெறிக்கும் சந்திரன் தன்னைச் சூழவுள்ள கருமேகத்தோடு நிலத்திலே வீழ்வது போல் மயங்கி வீழ்ந்தாள்.
- கண் சிவக்கும்படி அழுதாள்.
- பின் தன் கணவனை நினைந்து "நீ எவ்விடத்தாய்?/ எங்குள்ளாய்?" என்று பொருமி மயங்கினாள்.

(05 புள்ளிகள்)

(இ) மக்கள் பழி சொல்ல, மன்னன் செங்கோல் பிழைத்து தவறு செய்ய, இப்பிறவியில் கெட்ட பெயர் உண்டாக அவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு வெறுமனே இருந்து மடிதல் அவளுக்குச் சம்மதம் இல்லாததால்

(05 புள்ளிகள்)

(ஈ)
- "கள்வனோ என் கணவன்?" என்று சூரியனைப் பார்த்துக் கேட்கிறாள்.
- "கள்வன் அல்லன்: எரியுண்ணும் இவ்வூர்" என்று அசரீரி ஒலிக்கிறது.

(05 புள்ளிகள்)

(05 × 04 = 20 புள்ளிகள்)

**4 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**

**வினாவிற்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




இவ்வினா தெரிவு வினாவாக அமைந்துள்ளது. இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 20 ஆகும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 25% ஆனோர்
06 - 10 ஆயிடையில் 26% ஆனோர்
11 - 15 ஆயிடையில் 33% ஆனோர்
16 - 20 ஆயிடையில் 16% ஆனோர்

எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 51% மான பரீட்சார்த்திகள் 50% இலும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.




இவ்வினா நான்கு பிரிவுகளை கொண்டுள்ளது. நான்கு பிரிவுகளினது இலகுதன்மையும் சராசரியாகவே உள்ளன.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- வினாவை முழுமையாக விளங்கிக்கொண்டு விடையளிக்காமை. அதாவது கண்ணகி ஐயையிடம் வினாவுவதை மட்டும் எழுதியுள்ளமை. சந்தர்ப்பத்தை சரியாக விளக்கவில்லை.
- சுட்டிப்பாக விடை எழுதாமல் பாடப்பரப்பை அப்படியே விபரித்து எழுதியுள்ளமை.
- வினாக்களுக்கேற்ப முழுமையான விடைகளை எழுதத் தவறியுள்ளமை.
- கேட்கப்படும் வினாவுக்கு பொருத்தமுற விடையளிக்க தவறியமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- குறித்த பாடற்பொருளை தெளிவாக விளங்கிக் கொள்ள வழிப்படுத்தல்.
- பாடப்பரப்பைத் தெளிவாக விளங்கவும் விளங்கியதைத் தெளிவாக எடுத்துரைக்கவும் வழிப்படுத்தல்.
- சிலப்பதிகாரத்தில் குறித்த பாடற்பகுதி இடம்பெறும் சந்தர்ப்பத்தை எடுத்துக்கூற வழிப்படுத்துதல்.
- குறித்த பாடற்பகுதியில் பயின்றுவரும் உப செய்திகள் பற்றிய விளக்கத்தைப் பெற பயிற்றுவித்தல்.

**5. கைகேயீ சூழ்வினைப் படலத்தில்** மேல்வருவனவற்றுள் எவையேனும் **நான்கு** விடயங்கள், கம்பராலே சித்திரிக்கப்பட்டிருக்குமாற்றினைத் தெளிவுபடுத்துக.

(அ) இராமனது முடிசூட்டு விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்த தசரதன் அதனைத் தெரிவிக்கும் ஆர்வத்துடன் கைகேயியிடம் வந்தபோது அவள் கிடந்த கோலம்

(ஆ) கைகேயி கேட்ட இரு வரங்களைச் செவியுற்ற தசரதன் நிலை

(இ) வரங்களை அளித்த தசரதன் செயல் மறந்து மயங்கிய இரவு கழிந்தவாறு

(ஈ) இராமன் முடிசூடப்போகிறான் என்று கேள்விப்பட்ட நகரமக்கள் மனநிலை

(உ) மன்னவன் ஆணையைக் கைகேயி கூறக் கேட்ட இராமன் நிலை (20 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

5. (அ) - மலர்ப்படுக்கையினின்றும் இறங்கி, கூந்தலில் சூடியிருந்த மாலையை மேகத்திலிருந்த சந்திரனை இழுத்துச் சிதைப்பதுபோல் கூந்தலினின்றும் பிடுங்கிச் சிந்தினாள்.

- தன் புகழாகிய வல்லிக்கொடியை வேருடன் அறுப்பதுபோல மேகலாபரணத்தை அறுத்துச் சிதற எறிந்தாள்.
- வளையல்களைக் கழற்றி வீசினாள்.
- நெற்றித்திலகத்தையும் துடைத்துவிட்டாள்.
- ஏனைய ஆபரணங்களையும் சிதறவிட்டாள்.
- கூந்தலைத் தரையிலே பரப்பி, கண்ணீர் விட்டபடி மலர்களை உதிர்த்துவிட்ட கொம்புபோல நிலத்திலே வீழ்ந்தாள்.
- மான் விழுந்ததுபோல, ஆடிய மயில் ஆடல் ஒழிந்து படுத்தது போல, மூதேவி என்னும்படி சோர்ந்து கிடந்தாள்.

(05 புள்ளிகள்)

(ஆ) - நச்சுப்பாம்பின் விஷத்தினால் செயலிழந்த யானைபோல் வீழ்ந்தான்.

- புழுதியில் புரண்டான்.
- மனம் மிக வெதும்பிக் கொல்லன் உலைக்களத்து நெருப்புப்போலப் பெருமூச்சு விட்டான்.
- நா வரண்டு, உயிர் போகத்தொடங்கியது; மனம் வாடியது; கண்கள் மிகுந்த இரத்தத்தைச் சிந்தின.
- கவலை மிகுந்து செய்யத்தக்கது எது என ஐம்புலன்களும் கலங்கித் தவித்தன. (தன்னைச் சற்றுத் தேற்றிக்கொண்டு) எழுந்திருப்பான்; நிற்பான்; வீழ்வான்; மூச்சடங்கி ஓவியம்போல் அசையாது கிடப்பான்.
- கைகேயியைப் பற்றிப் பிடித்து நிலத்திலே மோதலாமா என நினைப்பான்.
- வெந்த புண்ணில் வேல் நுழைவதனால் வருந்தும் யானைபோல் ஆன தசரதன், ஒரு பெண்ணைக் கொல்வதனால் ஏற்படும் பழிக்கு நாணுவான்; உள்ளத்து நிறைந்த துன்ப வெள்ளத்தோடு மேலும் பெருமூச்சுவிட்டு அலைவான்.

(05 புள்ளிகள்)

(இ) - இரவென்னும் பெண், கைகேயியின் தீச் செயலுக்கு நாணி அகன்றாள்.

- வைகறை யாமத்து கூவும் கோழிகள் மனங்கலங்கி வயிற்றில் அடித்து அழுவதைப் போன்றன.
- பல்வகைப் பறவைகளின் ஒலிகள், மன வேதனையால் கைகேயியைத் திட்டுவதைப் போன்றன.
- நாமும் இந்த நாட்டினைவிட்டு அகல்வோம் என்பதுபோல் யானைகள் கிளம்பின.
- வானத்துப் பந்தலில் வேயப்பட்டிருந்த முத்து விதானத்தைப் பிரித்துவிட்டதுபோல் விண்மீன்கள் மறைந்தன.

(05 புள்ளிகள்)

(ஈ) • துன்னு காதல் துரப்ப எழுந்து வந்தனர்.

- மங்கையர் பரபரப்போடு எழுந்து அலங்கரித்துக் கொண்டனர்.
- நகர மக்கள் மகிழ்ந்தனர்.
  - மங்கையர் கோசலை மனம் ஒத்தார்
  - வேதியர் வசிட்டரை ஒத்தார்.
  - மகளிர் சீதையை ஒத்தார்.
  - சாதுகை மாந்தர் (சற்குணர்) தசரதனை ஒத்தார்.
- மக்கள் வீதிகளில் வெள்ளம்போல் திரண்டனர்.

(05 புள்ளிகள்)

(உ) - "என் தந்தையின் ஏவலை, தாயாகிய நுமது வாயால் கேட்பது பெரும்பேறாகும், அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு செய்வேன்" என இராமன் கூறுதல்.

- தசரதனது கட்டளையைக் கூறியபோது அவனது முகம் செந்தாமரை மலரை வென்றதாக மலர்தல்.
- உடையவனால் வண்டியில் பூட்டப்பட்ட எருது, கருணையுடைய வேறொருவனால் அவிழ்த்துவிடப்பட, அப்பாரம் நீங்கி மகிழ்ந்தது போன்ற நிலையை இராமன் அடைதல்.

(05 புள்ளிகள்)

(எவையேனும் நான்கிற்கு)

($05 \times 04 = 20$ புள்ளிகள்)

**5 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**




இவ்வினா ஐந்து உபபிரிவுகளைக் கொண்டுள்ளது. இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 20 ஆகும்.
இதில் 00 - 05 ஆயிடையில் 43% ஆனோர்
06 - 10 ஆயிடையில் 34% ஆனோர்
11 - 15 ஆயிடையில் 18% ஆனோர்
16 - 20 ஆயிடையில் 05% ஆனோர்
எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.
வினாத்தாள் I இல் மிகவும் கடினத்தன்மை வாய்ந்த ஒரு வினாவாக இவ்வினா அமைந்துள்ளது.




இவ்வினா 5 உபபிரிவுகளைக் கொண்டது. இலகுதன்மை குறைந்ததாக “இ” பகுதி (16%) காணப்படுகின்றது. (ஆ), (ஈ), (உ) பகுதிகளின் இலகுதன்மை முறையே 32%, 30%, 17% ஆகக் காணப்படுகின்றது.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- கைகேயி சூழ்வினைப் படலம் பற்றிப் பூரணமாக விளங்கிக் கொள்ளாமை.
- வினாக்களைச் சுட்டிப்பாகப் பகுத்து விடையளிக்க முடியாமல் போனமை.
- விடயங்களைப் பகுத்தும் தொகுத்தும் கூறும் திறனை மாணவர்கள் பெற்றிருக்கத் தவறியமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- இராமாயணக் கதையையும் அதில் கைகேயி சூழ்வினைப் படலம்பெறும் முக்கியத்துவத்தினையும் வரையறை செய்து மாணவர்களுக்கு தெளிவுறுத்தல்.
- இப்பகுதியில் வினாக்களைத் தொடுத்து அவற்றிற்கு விடையளிக்கும் திறனை மாணவர்களிடம் ஏற்படுத்தல்.
- கைகேயி சூழ்வினைப் படலத்தில் கதைத் தொடர்ச்சி, சம்பவங்கள், உரையாடல்கள் ஆகியவற்றின் ஊடாக கம்பர் கதையை நகர்த்திச் செல்லும் திறம் பற்றி பகுதி பகுதியாக மாணவர்கள் விளக்குவதற்கு

6. சுவாமி விபுலாநந்தரின் **பாரதி பாடல்** என்னும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு, மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) மனித வாழ்வில் கவிதையின் முக்கியத்துவம் பற்றிய விபுலாநந்தரின் கருத்து

(ஆ) தமிழ்நாட்டுக் கவிவாணருள் 'முதல்வைத்து எண்ணப்படும் தகைமை சான்றவர்' பாரதியாரே என்று விபுலாநந்தர் கருதுவதற்கான காரணம்

(இ) பாரதியார் பாடல்களை பொருள் அடிப்படையில் விபுலாநந்தர் வகைப்படுத்தும் முறை

(ஈ) பாரதியாரின் 'கண்ணன் பாட்டு' பற்றிய விபுலாநந்தரின் மதிப்பீடு (20 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

6. (அ) - மனித வாழ்வின் எல்லாப் பருவத்திலும் மனதுக்கு ஊக்கத்தையும், உவகையையும் அளிப்பது.

- குழந்தைப் பருவத்தில் தாலாட்டிக் கண்வளர்விப்பது; வாலிபப் பருவத்தில் காதல் ஊட்டிக் களிப்புறச் செய்வது; ஒத்த வயதினரோடு விளையாடும்போது உள்ளத்தில் கிளர்ச்சியினையூட்டி மகிழ்விப்பது; கிழப்பருவத்தில், கழிந்துபோன இளமையை நினைவூட்டி மகிழ்வுறுத்துவது.

- உயிரற்றுக் கிடக்கும் வெற்றுடம்பிற்கும் உயிரளிப்பது.

- ஆருயிர்க்கு உறுதி பயக்கும் அமிர்தத்தை நிகர்த்தது.

(04 புள்ளிகள்)

(ஆ) - தமிழ்நாடு செய்த தவப்பயனாய் உதித்து, தமிழ்நாட்டிற்கும் தமிழ்மொழிக்கும் அளவிடற்கரிய பேருபகாரத்தைச் செய்தமை.

- யாவரும் எளிதில் உணர்ந்துகொள்ளும் இலகுநடையில் அமைந்த பாடல்களைப் பாடியமை.

- சங்கச் செய்யுள்களிற் செறிந்து கிடக்கும் காதல் இன்பத்தையும், வீர மேம்பாட்டையும் யாவரும் எளிதில் உணர்ந்துகொள்ளும் இலகுவான நடையில் பாடியமை.

- உறுதி பயக்கும் உண்மைப் பொருளினை ஆராய்ந்து அறிந்தமை.

- ஆராய்ந்ததைப் பிறருக்குத் தெளிவாக வலியுறுத்தியமை.

- நினைப்போரது உள்ளத்திலே உவகையோடு கூடிய மனோபாவங்களை உண்டாக்கி, நெஞ்சினை உருக்கி, கண்ணீர்த்துளி பொருந்துமாறு செய்தமை.

(06 புள்ளிகள்)

(இ) - ஆறு வகையாக வகைப்படுத்துகின்றார்.

பாரதமாதா, கண்ணன், பராசக்தி, பாரதவீரர், பாரத மக்கள், குமாரவேள் ஆகிய பாட்டுடைத் தலைவரைப் பரவுகின்ற இன்னிசைப் பாடல்கள்.

(04 புள்ளிகள்)

(ஈ) - நெஞ்சினை உருக்கும் நீர்மை வாய்ந்தது.

- புதிய கருத்துகளும், புதிய நடையும் பொருந்தியது.

- தெய்வத்தைத் தோழனாகவும், தாயாகவும், தந்தையாகவும்,சேவகனாகவும், அரசனாகவும், சீடனாகவும், சற்குருவாகவும், குழந்தையாகவும், காதலனாகவும், காதலியாகவும், ஆண்டானாகவும், குலதெய்வமாகவும் பரவுகின்றமை: பக்திச் சுவை நிரம்பியமை.

- கண்ணனைத் தோழனாகப் பாடிய பாட்டு, நட்பின் இலக்கணத்தை உணர்த்தி தோழமையின் மாண்பினைக் கூறுகிறது.

- கண்ணனைத் தாயாகப் பாடிய பாட்டு, இயற்கையின் வனப்பு நலத்தினைக் கூறுவது. தந்தையாகப் பாடிய பாட்டு, காத்தற் கடவுளின் அருள் திறத்தையும், வேதத்தின் மாண்பையும் கூறுகிறது.

- சேவகனாகப் பாடிய பாட்டு, ஆண்டவனை அடிமையாகக் கொண்டவர்கள், இம்மை மறுமைச் சுகத்தைப் பெறுவர் எனக் கூறுகிறது.

- சீடனாகப் பாடிய பாட்டு, ஆண்டவனே நல்லறிவு உணர்த்தும் ஆசான் எனக் கூறுகிறது.

- சற்குருவாகப் பாடிய பாட்டு, வாழுகின்ற ஞான மார்க்கத்தை நலம் பெறக் கூறுகின்றது.

- காதலனாகப் பாடிய பாட்டு, கவிச்சுவை நுகர வல்லார்க்குத் தெவிட்டாத தெள்ளமுதாவன் எனக் கூறுகிறது.

- தன்னை அடிமைப் பறையனாகவும், கண்ணனை ஆண்டானாகவும் வைத்துப் பாடுகின்ற பாடல்கள், வியப்புச் சுவையையும், கருணைச் சுவையையும் கூறுகின்றன.

(06 புள்ளிகள்)
(04 + 06+04 + 06 = 20 புள்ளிகள்)

**6 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**




இவ்வினா தெரிவு வினாவாகும். மொத்தப்புள்ளி 20 ஆகும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 35% ஆனோர்
06 - 10 ஆயிடையில் 28% ஆனோர்
11 - 15 ஆயிடையில் 24% ஆனோர்
16 - 20 ஆயிடையில் 13% ஆனோர்

எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 4 பிரிவுகளைக் கொண்டுள்ளது. (ஆ), (இ) பகுதிகளின் இலகுதன்மை குறைவாகக் காணப்படுகின்றது. (அ), (ஈ) பிரிவுகள் ஓரளவு இலகுதன்மை கொண்டதாகக் காணப்படுகின்றது.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- மாணவர்களுக்கு கட்டுரை பற்றிய பூரணமான விளக்கம் போதாமை.
- பிரதான கருத்தை வலியுறுத்த கட்டுரை ஆசிரியர் துணைக் கருத்துகளைக் கையாண்ட விதத்தைச் சரியாக புரிந்துகொள்ளாமை.
- கட்டுரையில் குறிப்பிடப்பட்ட பொருளைவிட ஆசிரியர் தான் கூறவந்த கருத்தை எவ்வாறு புலப்படுத்துகின்றார் என்ற நுட்பத்தை விளங்கிக்கொள்ளாமை.
- பாரதி பாடல் பற்றி விபுலானந்தர் கூறுவதை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதாது பாரதியார் பற்றியும் அவரது பாடல்களைப் பற்றியும் பொதுவாக எழுதியமை.
- கேட்கப்பட்ட வினாவிற்குச் சுட்டிப்பாக விடையளிக்கத் தவறியமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- கட்டுரையை முழுமையாக வாசிக்க வழிப்படுத்தல்.
- கட்டுரையை அவதானமாக வாசித்து சுட்டிப்பாக விடை எழுத வழிப்படுத்துதல்
- கட்டுரையின் பிரதான கருத்தை துணைக்கருத்துகள் ஊடாக ஆசிரியர் எவ்வாறு கட்டமைக்கிறார் என்பதை அறிய வழிப்படுத்துதல்.
- கட்டுரை ஆசிரியரை முதன்மைப்படுத்தி அவரது கருத்துகளை விளங்கிக்கொள்ள வழிப்படுத்துதல்.

**7.** ஜெயகாந்தனின் **யுகசந்தி** என்ற சிறுகதையில்,

(அ) பாரம்பரிய மதிப்பீடுகளுக்குள் கட்டுண்ட பிராமண சமூகத்தில் விதவைகளின் மறுவாழ்வு பற்றிய பிரச்சினை எவ்வாறு கையாளப்படுகின்றது என்பதை விளக்குக.

(ஆ) கீதாவின் கடிதம் இக்கதையில் பெறும் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துக.

(இ) கௌரிப் பாட்டியின் பாத்திர உருவாக்கத்தினை மதிப்பிடுக.

(ஈ) சமூக மாற்றம் தொடர்பான ஆசிரியரின் நிலைப்பாடு இக்கதையில் வெளிப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

(20 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

7. (அ) - பாரம்பரிய மதிப்பீடுகளுள் கட்டுண்ட பிராமண சமூகத்தில் விதவைகளின் மறுவாழ்வு பற்றிய பிரச்சினை இக்கதையின் மையப்பொருளாக அமைதல்.

- சிறுவயதிலேயே ஒரு குழந்தையுடன் கணவனை இழந்து விதவையாகி “வரண்ட பாலையாய் மாறிப்போன வாழ்க்கை நெருப்பில் பொறுமையாய் நடந்து பழகியவளாக” கௌரிப் பாட்டியும் - பாட்டிபோல் விதவையானாலும் மறுமணம் புரிந்து புதுவாழ்வு தேட முனையும் அவளது பேத்தி கீதாவும் கதையின் மையப் பாத்திரங்களாக உருவாக்கப்பட்டு, விதவைகளின் மறுவாழ்வு பற்றிய பிரச்சினை இக்கதையில் பேசப்படுகின்றது.

- கீதாவின் முடிவை முழுக்குடும்பமும் எதிர்ப்பதும் பாட்டி மட்டும் ஆதரிப்பதும் முக்கிய கவனத்திற்குரியது.

- கணேசையருக்கும், பாட்டியம்மாளுக்கும் இடையே நடைபெறும் உரையாடல் மூலம் பிரச்சினை அலசப்படுவது.

- கீதாவின் நிலைப்பாட்டை ஆதரித்து அவளுக்குத் துணையாக இருப்பதற்காக வீட்டைவிட்டு வெளியேறும் பாட்டியின் உறுதிப்பாடுமூலம் மாறிய சமூகத்தில் விதவை மறுமணத்துக்கான ஆதரவு வெளிப்படல்.

(05 புள்ளிகள்)

(ஆ) - கீதாவிடமிருந்து பாட்டி கொண்டுவந்த கடிதம் கதையின் முக்கிய திருப்புமுனையாக அமைதல்.
- பாரம்பரியக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுபடத் துடிக்கும் சமூக உணர்வின் வெளிப்பாடாக அமைதல்
- கீதாவின் முடிவை கடிதம் வெளிப்படுத்துதல்.
- கீதாவின் கடிதம் குடும்ப உறுப்பினர்களிடம் எழுப்பும் எதிர்வினை - இதன் மூலம் சமூகத்தில் வேரூன்றியுள்ள பாரம்பரிய மதிப்பீடு வெளிப்படுத்தப்படுதல்.

(05 புள்ளிகள்)

(இ)
- • கௌரிப் பாட்டி பழைமைக்கும் புதுமைக்குமான ஒரு பாலமாக இக்கதையில் உருவாக்கப்பட்டுள்ளாள்.

- • பாரம்பரிய மதிப்பீடுகளால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் பிரதிநிதியாகவும், அதனாலேயே சமூக மாற்றத்தை வேண்டி நிற்கும் ஒரு பாத்திரமாகவும் உருவாக்கப்பட்டுள்ளாள்.

- • பாட்டியின் முற்போக்கான சிந்தனைகள்:
  - நாவிதனின் பிள்ளைகளை எப்பாடுபட்டாவது படிப்பிக்கச் சொல்வது.
  - காலம் மாறும்போது மனுஷாளும் மாற வேண்டும் என்று சொல்வது.
  - கீதாவின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்வது.
  - ஆசார உணர்வு மிக்க மகனுடன் வாதிட்டு காலமாற்றம், சமூகமாற்றத்தை உணர்த்துவது.
  - இவ்வகையில் பாட்டி ஒரு யுகசந்தியாக அமைவது.
  - அவ்வகையில் தமிழ்ச் சிறுகதை உலகில் பாட்டி ஒரு மறக்க முடியாத பாத்திரமாக அமைவது.

(05 புள்ளிகள்)

(ஈ) - காலத்துக்கேற்ற வகையில் சமூகம் மாறவேண்டும் என்ற கருத்துடையவர் இக்கதையாசிரியர் என்பது இக்கதையின் மூலம் வெளிப்படுகின்றது.

- சம்பவங்கள் மூலமும், எதிர்நிலைப் பாத்திரங்களின் உரையாடல் மூலமும் ஆசிரியரின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்படுதல்.

- கௌரிப்பாட்டி, கீதா ஆகிய பாத்திரங்களினூடாக ஆசிரியரின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்படுதல்.

(05 புள்ளிகள்)

(05 × 04 = 20 புள்ளிகள்)

**7 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**




இவ்வினா தெரிவு வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 20 ஆகும்.
இதில் 00 - 05 ஆயிடையில் 22% ஆனோர்
06 - 10 ஆயிடையில் 42% ஆனோர்
11 - 15 ஆயிடையில் 31% ஆனோர்
16 - 20 ஆயிடையில் 5% ஆனோர்
எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 4 பிரிவுகளைக் கொண்டுள்ளது. (அ), (ஆ), (இ), (ஈ) ஆகிய 4 பிரிவுகளுமே இலகுதன்மை குறைந்ததாகக் காணப்படுகின்றன.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- வினாவினுடைய இறுக்கமான மொழிக் கட்டமைப்பு காரணமாக மாணவர்கள் வினாவைச் சரிவரப் புரிந்துகொள்ளாமையினால் ஏற்ற விடையை எழுதத் தவறியமை.
- சொந்த மொழிநடையில் எழுதாமல் சிறுகதையையே விடையாக எழுதியுள்ளமை.
- பாத்திர உருவாக்கத்தின் முக்கியத்துவத்தை எழுதாமல் பாத்திரம் பற்றிய விவரிப்பாக எழுதியுள்ளமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- சிறுகதையை முழுமையாக வாசித்துக் கிரகிக்க வழிப்படுத்துதல்.
- சிறுகதைக்குரிய பண்புகளை இனங்கண்டு விளக்க வழிப்படுத்துதல்.
- சிறுகதையின் மையக்கருத்தை எடுத்துரைப்பதற்குக் கையாண்ட உத்திகளை அறிந்து கூற வழிப்படுத்துதல்.
- பாத்திர உருவாக்கம், அதன் வளர்ச்சி, ஏனைய பாத்திரங்களுக்கிடையிலான ஊடாட்டம் என்பன எவ்வாறு அமைந்துள்ளன என்பதை அறிந்து கூற வழிப்படுத்துதல்.
- சிறுகதையை விமர்சன நோக்கில் அணுகி வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற வழிப்படுத்துதல்.
- சிறுகதைகளின் பின்புலங்கள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- சிறுகதையை அதன் காலம், கருத்துப் பின்னணியுடன் சமூகவியல் நோக்கில் விளங்கிக்கொள்ள வழிப்படுத்துதல்.
- சிறுகதையில் கையாளப்படும் மொழிநடை பற்றி அறிய வழிப்படுத்துதல்.

8. மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) சுந்தரரின் **சீபர்ப்பதம் பதிகத்தில்** சீபர்ப்பதமலையின் இயற்கையழகு

(ஆ) தேம்பாவணி **பைதிரம் நீங்கு படலத்தில்** யேசுபாலனின் பிரிவால் யூதேயா நாட்டுக்கு ஏற்பட்ட அவலம்

(இ) சீறாப்புராணம் **மழை அழைப்பித்த படலத்தில்** மழைவெள்ளம் ஐவகை நிலத்தையும் சென்றடைவதை உமறுப்புலவர் சித்திரிக்குமாறு

(ஈ) புதுமைப்பித்தனின் **சாபவிமோசனம்** சிறுகதையில், அநீதி என்று பட்டதை எதிர்க்கும் அகலிகையின் ஆவேசம்

(20 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

8. (அ) - இயற்கை அழகோடுகூடிய குறவர்களின் வாழ்க்கை.

- யானைகள், பன்றிகள், மான்கள், மரைகள், கிளிகள், மயில்கள் ஆகியனவற்றின் செயற்பாடுகள். (உணவினைத் தேடல், நீர் பருகுதல், மரங்களில் உடம்பினை உராய்தல்,யானைகளை உணவு உண்ணச் செய்தல், கிளிகளை விரட்டுதல், ஆண் - பெண் யானைகளின் முரண், மிருகங்களும் பறவைகளும் தேன் உண்ணுதல்).

(ஆ) - இசைக்கருவிகள் இயங்காமை. (முரசு, சங்கு)

- ஊரின் அமைதி செத்த உடம்பினை ஒத்திருத்தல்.
- நன்மைகள் நலிந்து போதல்.
- நற்பண்புகள் நீங்குதல். (அருள், அன்புணர்ச்சி, அறிவு, தருமம், தவம்,வேதம், கொடை, தெளிவு, வறுமை, நீதி, வீரச்சிறப்பு, பெருமை, மனவுறுதி, ஞானம், பொருள்,புகழ், புலமை, வனப்பு, வசீகரம்)
- ஏரோதுவின் குணம்போல அவனால் ஆளப்பட்ட மக்கள் பாவச் செயல்களில் ஈடுபட்டு அறியாமையில் படர்ந்திருத்தல்.
- பகை, நெடும்பசி, நோய், வறுமை, கேடு, நீசத்தனம், தீய செயல்கள் என்பன அறிவை அகற்றி மனங்கலக்குதல், பாவவினை வளர்ந்து வாட்டுதல்.

(இ) - மழை வெள்ளம் குறிஞ்சி நிலத்திலுள்ள மூங்கில்களை முறித்து, அவை வெடித்ததால் சிதறிய முத்துக்களை முல்லை நிலத்திலுள்ள புறாக்களுக்குக் கொடுத்தல்.

- முல்லை நிலத்தில் கிடைக்கின்ற தூய நெய், தயிர், பால் ஆகியவற்றை குடத்துடன் எடுத்து வெம்மைமிகுந்த பாலை நிலத்தில் சேர்த்தல்.
- பாலை நிலத்தில் காணப்படும் படத்தினையுடைய நாக பாம்பின் நாகரத்தினங்களை வளம் நிறைந்த மருத நிலத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தல்.
- மருத நிலத்திலுள்ள நெற்குவியல்களைத் தாக்கி நெய்தல் நிலத்திற் சேர்த்தல்.
- நெய்தல் நிலத்திலுள்ள உப்பினை சமுத்திரத்தினுள் கொண்டு சேர்த்தல்.

(ஈ) - அக்கினிப் பிரவேசம் பற்றி சீதை கூறியபோது, அகலிகை துடித்தல்.

- "அவர் கேட்டாரா? நீ ஏன் செய்தாய்?" எனக் கேட்டு, தனது எதிர்ப்பை வெளிப்படுத்துதல்.
- "அவர் கேட்டார், நான் செய்தேன்" எனச் சீதை கூறியபோது, "அவன் கேட்டானா?" என அகலிகை கத்துதல்.
- அவள் மனதில் கண்ணகி வெறி தாண்டவமாடியதாகவும், "அகலிகைக்கு ஒரு நீதி, அவனுக்கு ஒரு நீதியா? ஏமாற்றா? கோதமன் சாபம் குடலோடு பிறந்த நியாயமா?" என அவள் கேட்டதாகவும் அகலிகையின் மனவுணர்வினை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளமை.
- "உள்ளத்துக்குத் தெரிந்தால் போதாதா? உண்மையை உலகத்திற்கு நிரூபித்து விட்டால் மட்டும் அது உண்மையாகிவிடப் போகிறதா?" என்ற அகலிகையின் கேள்வியானது ஒட்டுமொத்த ஆண் வர்க்கத்தினரையும் நோக்கி எழுப்பப்படும் கேள்வியாக அமைதல்.
- இராமனை வழியனுப்பச் செல்லாமல் தனது எதிர்ப்பையும் ஆவேசத்தையும் வெளிப்படுத்துதல்.
- மேலும், பரதனைக் கட்டுப்படுத்தக் கோரும்போது "மனிதருக்குக் கட்டுப்படாத தர்மம், மனித வம்சத்திற்குச் சத்துரு" என அகலிகை கொதித்தல்.

($10 \times 02 = 20$ புள்ளிகள்)

**8 வது வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




இவ்வினா தெரிவு வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 20 ஆகும். நான்கு வினாக்களில் இரண்டினைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 19% ஆனோர்

06 - 10 ஆயிடையில் 27% ஆனோர்

11 - 15 ஆயிடையில் 37% ஆனோர்

16 - 20 ஆயிடையில் 17% ஆனோர்

எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவுக்கு 82% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர். 4 பிரிவுகளைக் கொண்ட இவ்வினாவில் "அ" பிரிவின் இலகுதன்மை 62% ஆகவும் "ஈ" பிரிவின் இலகுதன்மை 7% ஆகவும் காணப்படுகின்றது.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- மழையழைப்பித்த படலத்தில் மழை வெள்ளம் ஐவகை நிலத்தையும் சென்றடைவதை விபரிக்கின்றது. ஆனால் அதனைக் கருத்திற் கொள்ளாது பொதுவாக விடையளித்துள்ளமை.
- சாப விமோசனம் சிறுகதையில் அகலிகையின் ஆவேசம் ஆங்காங்கே பல இடங்களிலும் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றைத் தொகுத்துக் கூறத் தவறியமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- பாடப்பரப்பிற்குள் தொகுக்கக் கூடிய வினாக்களை இனங்கண்டு அதற்கேற்ப விடை எழுத மாணவர்களைத் தயார்ப்படுத்தல்.
- பாடப்பரப்பிற்குள் மாணவர்கள் தாங்களாகவே வினாக்களைத் தொடுத்து அவற்றுக்கு விடைகளை எழுதுதல், மதிப்பிடல், மீளவலியுறுத்தல் பற்றிய பயிற்சிகளை அளித்தல்.
- விதந்துரைக்கப்பட்ட இலக்கிய பாடப்பரப்பொன்றினை முழுமையாகவும் பகுதியாகவும் கிரகித்து அதற்கேற்றவாறு விடையெழுத மாணவர்களுக்குப் பயிற்றுவித்தல்.

### 2.1.3 வினாப்பத்திரம் I இற்கு விடையளித்துள்ளமை தொடர்பான பொதுவான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- விதிக்கப்பட்ட பாடப்பரப்பிலிருந்து வினாக்கள் அமைந்துள்ளபோதும் பரீட்சார்த்திகள் விளங்கிக்கொண்டு விடை எழுதிய தன்மை குறைவு.
- இலக்கியங்களின் பின்னணி, முழுமையான விடயப்பரப்பு என்பவற்றை அறிந்திருக்காமை.
- இலக்கிய ரசனை, அனுபவம் என்பவற்றின் வாயிலாக விடையளித்த தன்மை குறைவு.
- இலக்கியங்களில் இடம்பெற்ற விடயங்களை மேற்கோள் காட்டுதல், தொடர்புபடுத்தி விடை எழுதுதல் என்பன குறைவடைந்துள்ளன.
- குறித்த வினாவின் அனைத்து பகுதிகளுக்கும் திருப்தியாக விடையளித்த தன்மை குறைவு.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- இலக்கியங்களை ரசனையோடு கற்பித்தல்.
- இலக்கியங்களின் முழுமையை அறிய வழிப்படுத்தல் (பகுதியிலிருந்து முழுமைக்குச் செல்லல்)
- பல்வகைத்தன்மை கொண்ட வினாக்களை வழங்கி விடை எழுதப் பயிற்சியளித்தல், மதிப்பிடல், மீளவலியுறுத்தல்.
- தெரிவு செய்த வினாவின் சகல பகுதிகளுக்கும் உரிய விடையை முழுமையாக எழுத வழிப்படுத்தல்.
- குறித்த வினாவுக்கு இலக்கியத்தின் குறித்த எல்லைக்குள் இருந்து விடையளித்தல்.

## 2.2 வினாப்பத்திரம் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

### 2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு

நேரம் : 03 மணித்தியாலம் மொத்தம் : 100 புள்ளிகள்

- இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

  பகுதி I :- 03 கட்டாய வினாக்களைக் கொண்டது.

  பகுதி II :- "அ" பிரிவிலிருந்து ஒரு வினாவுக்கும்

  "ஆ" பிரிவிலிருந்து ஒரு வினாவுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

2.2.2 **வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும் ஆலோசனைகளும்**

**1.** (அ) **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் சார்பெழுத்து
(1) ஆ (2) ம் (3) ஐ (4) ம (5) க் (……)

1.2 பின்வருவனவற்றுள் 'எ' வேறுபட்டு ஒலிக்கும் சொல்
(1) என்ன (2) எருமை (3) எழுது (4) எது (5) எல்லை (……)

1.3 பின்வருவனவற்றுள் வன்தொடர்க் குற்றியலுகரம் இடம்பெறும் சொல்
(1) ஆடு (2) அங்கு (3) விட்டு (4) விறகு (5) செய்து (……)

1.4 பின்வருவனவற்றுள் குற்றியலுகரம் கெட்டுப் புணர்ந்த சொல்
(1) வாக்கை (2) வாழ்க்கை (3) பருக்கை (4) புக்கை (5) அளிக்கை (……)

1.5 வேற்றுமை உருபு ஏற்கும்போது 'அத்து' சாரியை பெறும் சொல்
(1) மையீற்றுப் பெயர் (2) மகர ஈற்றுப் பெயர் (3) பண்புப் பெயர்
(4) மூவிடப் பெயர் (5) குற்றியலுகர ஈற்றுப் பெயர் (……)

1.6 வருமொழி முதலில் உயிர் வரும்போது ஈற்றுமெய் இரட்டித்துப் புணரும் சொல்
(1) பால் (2) காண் (3) கண் (4) வாள் (5) மடல் (……)

1.7 பின்வருவனவற்றுள் பகுபதம்
(1) விருந்து (2) பருந்து (3) இருந்து (4) வருந்து (5) அருந்து (……)

1.8 'ஓடிக்கொண்டிருந்தார்கள்' - இச்சொல்லின் பகுதி
(1) ஓடி (2) ஓடு (3) ஓடிக்கொண்டிரு
(4) ஓடிக்கொள் (5) ஓடிக்கொண்டு (……)

1.9 தாங்கள் எப்போது வருவீர்கள் ? - இவ்வாக்கியத்தில் 'தாங்கள்' என்பது
(1) படர்க்கைப் பன்மைப் பெயர் (2) தன்மைப் பன்மைப் பெயர்
(3) முன்னிலைப் பன்மைப் பெயர் (4) முன்னிலை உயர் மரியாதைப் பெயர்
(5) படர்க்கைப் பெயர் (……)

1.10 பின்வருவனவற்றுள் 'அல்' விகுதி பெற்ற ஆக்கப்பெயர்
(1) சுண்டுதல் (2) வண்டல் (3) சுண்டல்
(4) ஓடல் (5) பொரித்தல் (……)

1.11 'அவன் சொன்னது எனக்குத் தெரியாது.' - இவ்வாக்கியத்தில் இடம்பெறும் 'சொன்னது' என்ற சொல்
(1) இறந்தகால வினைமுற்று (2) ஒன்றன்பால் வினைமுற்று
(3) வினையாலணையும் பெயர் (4) தொழிற்பெயர்
(5) காலங்காட்டும் தொழிற்பெயர் (……)

1.12 பின்வருவனவற்றுள் வினைத்தொகை இடம்பெற்ற சொல்
(1) முகநூல் (2) சுடுநீர் (3) மீன்சந்தை
(4) முழுநிலவு (5) கருமுகில் (……)

1.13 'ஆல்' வேற்றுமை உருபாக இடம்பெறும் சொல்
(1) நடந்தால் (2) நடந்திருந்தால் (3) நடந்ததால்
(4) நடக்காவிட்டால் (5) நடந்திருக்காவிட்டால் (……)

1.14 கூட்டுவினை இடம்பெறும் வாக்கியம்

(1) நான் ஊருக்குப் போய் வந்தேன்.
(2) நான் ஊரிலிருந்து வந்தேன்.
(3) நான் ஊருக்கு வரமாட்டேன்.
(4) நான் ஊரிலிருந்து வந்துவிட்டேன்.
(5) நான் உங்களை ஊருக்கு வந்து பார்க்கிறேன். (……)

1.15 பின்வருவனவற்றுள் 'இ' கால இடைநிலையாக வந்துள்ள வினைமுற்று

(1) ஓடினேன் (2) ஓடினாய் (3) ஓடினார்
(4) ஓடின (5) ஓடியது (……)

1.16 பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினை

(1) எழுது (2) படி (3) உண்
(4) அழு (5) பார் (……)

1.17 'படித்த' என்பது பெயரடையாக வரும் வாக்கியம்

(1) அவர் படித்த புத்தகங்கள் ஏராளம்.
(2) என்னிடம் படித்த மாணவர்கள் என்னை இன்றும் மதிக்கிறார்கள்.
(3) என்னுடன் படித்த கமலா நன்றாகப் பாடுவாள்.
(4) அவன் ஒரு படித்த பெண்ணைத்தான் திருமணம் செய்தான்.
(5) நான் படித்த கவிதை அற்புதமானது. (……)

1.18 'இன்னா நாற்பது கபிலரால் எழுதப்பட்டதென்பது பெரும்பாலார் கொள்கை.' - இவ்வாக்கியத்தில் எழுவாய்

(1) இன்னா நாற்பது (2) பெரும்பாலார்
(3) கபிலரால் எழுதப்பட்டதென்பது (4) இவ்வாக்கியத்தில் எழுவாய் இல்லை.
(5) இன்னா நாற்பது கபிலரால் எழுதப்பட்டதென்பது (……)

1.19 'என் சாஸ்திரம் என்னோடேயே இருந்து, இந்தக் கட்டையோடேயே எரியும்.' - இவ்வாக்கியம்

(1) தனி வாக்கியம். (2) கூட்டு வாக்கியம். (3) கலப்பு வாக்கியம்.
(4) இலக்கண வழுவுடையது. (5) கூட்டுக் கலப்பு வாக்கியம். (……)

1.20 'கணேசையர் கண்களைப் பிழிந்துவிட்டுக் கொண்டார்.' - இவ்வாக்கியத்தில் 'கண்களைப் பிழிந்து விடுதல்' என்பதன் பொருள்

(1) கண்களைக் கசக்குதல் (2) கண்களை வருத்துதல்
(3) கண்களை உறுத்துதல் (4) கண் கலங்குதல்
(5) துயர் மிகுதியால் அழுதல் (……)

(20 புள்ளிகள்)

* *

**வினாப்பத்திரம் II பகுதி I எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

| வினா இலக்கம் | விடை |
|---|---|
| 1.1 | 4 |
| 1.2 | 3 |
| 1.3 | 3 |
| 1.4 | 1 |
| 1.5 | 2 |
| 1.6 | 3 |
| 1.7 | 3 |
| 1.8 | 3 |
| 1.9 | 4 |
| 1.10 | 3 |
| 1.11 | 5 |
| 1.12 | 2 |
| 1.13 | 3 |
| 1.14 | 4 |
| 1.15 | 5 |
| 1.16 | 4 |
| 1.17 | 4 |
| 1.18 | 5 |
| 1.19 | 2 |
| 1.20 | 5 |
| | 1 x 20 = 20 புள்ளிகள் |

**பகுதி I "அ" இற்குரிய பல்தேர்வு வினாக்கள் அமைப்பு முறை**

| வினா இலக்கம் | விடயம் |
|---|---|
| 1.1, 1.2, 1.3 | எழுத்தியல் |
| 1.4, 1.5, 1.6 | புணரியல் |
| 1.7, 1.8 | பதவியல் |
| 1.9,1.10, 1.11, 1.12 | பெயரியல் |
| 1.13 | வேற்றுமை |
| 1.14, 1.15, 1.16 | வினையியல் |
| 1.17, 1.18, 1.19 | வாக்கியவியல் |
| 1.20 | மரபு |

**வினாத்தாள் II பகுதி I "அ" இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவுசெய்துள்ள விதம் (சதவீதத்தில்)**

| வினா இலக்கம் | சரியான தெரிவு | தெரிவு செய்யப்பட்ட தெரிவின் வீதம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | **1** | **2** | **3** | **4** | **5** | **Missing** |
| 1.1 | 4 | 11.9 | 10.8 | 40.0 | **30.6** | 6.8 | - |
| 1.2 | 3 | 17.8 | 21.1 | **31.1** | 18.6 | 11.4 | 0.1 |
| 1.3 | 3 | 9.2 | 7.0 | **48.9** | 28.5 | 6.5 | - |
| 1.4 | 1 | **32.1** | 26.2 | 14.0 | 22.4 | 5.0 | 0.2 |
| 1.5 | 2 | 20.5 | **33.4** | 17.0 | 11.7 | 17.3 | 0.2 |
| 1.6 | 3 | 8.0 | 27.1 | **36.5** | 9.3 | 18.4 | 0.9 |
| 1.7 | 3 | 9.8 | 16.7 | **60.8** | 7.4 | 5.1 | 0.8 |
| 1.8 | 3 | 14.4 | 31.5 | **37.3** | 2.4 | 14.4 | 0.8 |
| 1.9 | 4 | 6.9 | 10.7 | 14.0 | **66.1** | 2.4 | 0.8 |
| 1.10 | 3 | 8.7 | 10.2 | 13.8 | 29.9 | 37.3 | - |
| 1.11 | 5 | 42.8 | 5.7 | 19.0 | 7.6 | **24.9** | 0.1 |
| 1.12 | 2 | 3.6 | **74.7** | 11.1 | 5.3 | 5.2 | - |
| 1.13 | 3 | 37.7 | 12.7 | **38.2** | 5.4 | 5.7 | 0.2 |
| 1.14 | 4 | 23.1 | 3.2 | 1.5 | **13.2** | 59.0 | 0.1 |
| 1.15 | 5 | 14.4 | 22.8 | 6.4 | 13.3 | **43.1** | 0.1 |
| 1.16 | 4 | 12.2 | 9.8 | 17.0 | **53.3** | 7.6 | 0.1 |
| 1.17 | 4 | 11.7 | 9.9 | 23.1 | **31.1** | 24.1 | 0.2 |
| 1.18 | 5 | 25.1 | 19.3 | 34.8 | 12.4 | **8.2** | 0.3 |
| 1.19 | 2 | 11.1 | **29.5** | 23.9 | 21.9 | 13.5 | 0.2 |
| 1.20 | 5 | 16.1 | 2.8 | 2.6 | 26.3 | **51.9** | 0.3 |

ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையைத் தெரிவு செய்த மாணவர் சதவீதம் நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது.

**வினாப்பத்திரம் II பகுதி I**

**வினா இலக்கம் 1 "அ" (பல்தேர்வு வினாக்கள்) தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள், ஆலோசனைகள்**

- 1.1 ஆம் வினாவிற்கு 31% பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர். விடைச் சிதறலில் 40% பரீட்சார்த்திகள் 3 ஆவது விடையினைத் தெரிவு செய்திருந்தனர். காரணம் "ஐ" என்று என்னும் உயிரை "ஐ"காரக் குறுக்கம் எனக் கருதியிருக்கலாம்.

- 1.4 ஆம் வினாவிற்கு 32.1% பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர். விடைச் சிதறலில் 26.2% ஆனோர் 2 ஆவது விடையையும் 22.4% ஆனோர் 4 ஆவது விடையையும் தெரிவு செய்திருந்தனர்.

- 1.5 ஆம் வினாவிற்கு 33.4% பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர். விடைச் சிதறலில் 20.5% பரீட்சார்த்திகள் 1 ஆவது விடையைத் தெரிவு செய்திருந்தனர். காரணம் மகர ஈற்றும் பெயர் அத்துச் சாரியை ஏற்கும் என்பதை அறியாது இருந்தமையாகும்.

- 1.6 ஆம் வினாவிற்கு 36.5% பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர். விடைச் சிதறலில் 27.1% ஆனோர் 2 ஆவது விடையையும் தெரிவு செய்திருந்தனர். இதில் ஈற்று மெய் எது என்பதை இனங்கண்டு கொள்ளாமை இதற்கு காரணமாக இருக்கலாம்.

- 1.8 ஆம் வினாவிற்கு 37.3% பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவுசெய்திருந்தனர். 31.5% பரீட்சார்த்திகள் 2 ஆவது விடையையும் தெரிவு செய்திருந்தனர். கூட்டு வினை, தனி வினை என்பவற்றை கருத்திற் கொள்ளப்படாமை இதற்கு காரணமாக இருக்கலாம்..

- 1.10 ஆம் வினாவிற்கு 13.8% பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர். விடைச்சிதறலில் 29.9% பரீட்சார்த்திகள் 4 ஆவது விடையையும் 37.3% பரீட்சார்த்திகள் 5 ஆவது விடையையும் தெரிவு செய்திருந்தனர். இதில் ஓடல், பொரித்தல் என்பன தொழிற்பெயர்கள் ஆனால் ஆக்கப் பெயர் என உணர்ந்து கொண்டமையே தவறியமைக்கான காரணமாகும்.

- 1.11 ஆம் வினாவிற்கு 24.9% பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர். காரணம் "சொன்னது" என்பது காலம் காட்டும் தொழிற்பெயர் என்பதை அறியாமையாகும்.

- 1.13 ஆம் வினாவிற்கு 38.2% பரீட்சார்த்திகள் சரியான விடையளித்திருந்தனர். விடைச் சிதறலாக 37.7% ஆனவர்கள் 1 ஆவது விடையைத் தெரிவு செய்திருந்தனர். காரணம் வினைச் சொல் ஆல் உருபு ஏற்கும்போது வினையாலணையும் பெயர் என்பதை உணராமையாகும்.

- 1.14 ஆம் வினாவிற்கு 13.2% பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர். கூட்டுவினை பற்றிய தெளிவு இன்மை 75% இற்கும் அதிகமானோர் தவறியமைக்குக் காரணமாக இருக்கக்கூடும்.

- 1.17 ஆம் வினாவிற்கு 31.1% பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர். 24.1% ஆனவர்கள் 5 ஆவது விடையையும் 23.1% ஆனவர்கள் 3 ஆவது விடையையும் தெரிவு செய்திருந்தனர். செயப்படு பொருள் குன்றிய, குன்றா வினைகளை இனங்காண்பதில் உள்ள இடர்ப்பாடே இதற்குக் காரணமாகும்.

- 1.18 ஆம் வினாவிற்கு 8.2% பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர். வாக்கியங்களில் இடம்பெறும் எழுவாய், பயனிலைகளை அறிய முடியாது தவறியமையே இதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.

- 1.19 ஆம் வினாவிற்கு 29.5% பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளனர். பிழையான 3 ஆம் 4 ஆம் விடைகளை முறையே 23.9%, 21.9% பரீட்சார்த்திகள் தெரிவு செய்தமைக்கான காரணம் கூட்டுவாக்கியத்திற்கும் கலப்பு வாக்கியத்துக்குமிடையிலான வேறுபாட்டை அறியாமையே எனக் கொள்ளலாம்.

## பகுதி I

**1. (ஆ) பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.**

1. கூட்டுப்பகுதி என்றால் என்ன ? உதாரணம் தந்து விளக்குக.
2. படர்க்கைத் தற்சுட்டுப்பெயர் என்றால் என்ன என்பதை விளக்கி, அது இடம்பெறும் வாக்கியம் ஒன்றை எழுதுக.
3. எதிர்மறைவினை என்றால் என்ன ? தற்காலத் தமிழில் இடம்பெறும் எதிர்மறை இடைநிலைகள் யாவை ?
4. வேற்றுமைப்புணர்ச்சியை உதாரணம் தந்து விளக்குக.
5. வினாப்பெயர்களை திணை அடிப்படையில் வகைப்படுத்துக. (10 புள்ளிகள்)

### எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

1. (ஆ) 1. • பகுபதம் ஒன்றின் அடிச்சொல் பகுபதமாக, அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களால் ஆன கூட்டுச்சொல்லாக இருப்பின் அது கூட்டுப்பகுதி எனப்படும்.

உதாரணம்:

- குருவிக்கூடுகள் - குருவிக்கூடு + கள் இங்கு பகுதி - குருவிக்கூடு. இது குருவி, கூடு என்ற இரண்டு சொற்களாலானது
- வந்துவிட்டான் - இங்கு, வந்துவிடு என்பது கூட்டுப் பகுதி.

2. • வாக்கியத்தில் எழுவாய்ப்பெயரைச் சுட்டும் தான், தாம், தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர்கள் படர்க்கைத் தற்சுட்டுப் பெயர் எனப்படும்.
   • உதாரண வாக்கியம்:
   - மாணவர்கள் தங்கள் கல்வியில் கவனமாக இருக்க வேண்டும்.

3. • வினை நிகழாமையை உணர்த்தும் வினை எதிர்மறைவினை எனப்படும்.
   • தற்காலத் தமிழில் இடம்பெறும் எதிர்மறை இடைநிலைகள்:
   - ஆ - — வராது
   - ஆத் - — வராதே
   - மாட்டு - — வரமாட்டேன்

4. • எழுவாய் வேற்றுமையும் விளிவேற்றுமையும் தவிர்ந்த ஏனைய ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலிய உருபுகள் வெளிப்பட்டும் மறைந்தும் வர, சொற்கள் புணர்வது வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும்.
   • உதாரணம் : ஆற்றைக் கடந்தான்.
   ஆறு கடந்தான்.

5.

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| யார் | என்ன |
| எவன் | எது |
| எவள் | எவை |
| எவர் | எத்தனை |
| எவர்கள் | எவ்வளவு |

(02 × 05 = 10 புள்ளிகள்)

(முதலாம் வினாவுக்கு 20 + 10 = 30 புள்ளிகள்)

**1 ஆம் வினாவின் அ, ஆ பகுதிகளுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




வினாப்பத்திரம் II இன் பகுதி I இலுள்ள 1 ஆம் வினா கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 30 ஆகும். (அ - 20 புள்ளிகள் ஆ-10 புள்ளிகள்)

இதில் 00 - 07 ஆயிடையில் 42% ஆனோர்
08 - 15 ஆயிடையில் 44% ஆனோர்
16 - 22 ஆயிடையில் 12% ஆனோர்
23 - 30 ஆயிடையில் 2% ஆனோர்
எனும் வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இதில் 42% பரீட்சார்த்திகள் 0-7 புள்ளிகளையே பெற்றுள்ளார்கள். இவ் வரைபு பரீட்சார்த்திகள் இலக்கணத்தில் தெளிவான அறிவைப் பெறவில்லை என்பதைப் புலப்படுத்துகின்றது. 16-30 புள்ளிகளை 14% பரீட்சார்த்திகளே பெற்றுள்ளனர். ஆசிரியர்களும் மாணவர்களும் இலக்கணப் பகுதியில் கூடிய கரிசனை காட்ட வேண்டும் என்பதனை இவ் வட்ட வரைபு சுட்டிநிற்கின்றது.




பகுதி I "ஆ" இற்குரிய உபவினாக்களுக்கு மிகக் குறைந்தளவான பரீட்சார்த்திகளே சரியான விடையினை அளித்துள்ளனர். அந்த வகையில் வினா இலக்கம் 5 இற்கு 32% சரியான விடையளித்திருந்த போதும் வினா இலக்கம் 2 இற்கு 10% மாணவர்களே சரியான விடையை அளித்துள்ளனர். இந்த வகையில் வினா இலக்கம் 2 கடினத்தன்மை கொண்டதாகக் காணப்படுவதோடு ஏனைய வினாக்கள் கிட்டத்தட்ட ஒரே இலகுதன்மையைக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

**வினா இலக்கம் 1 "ஆ" தொடர்பாக அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**

**வினாத்தாள் II - வினா I அ, ஆ வினாக்களின் அமைப்பு :**

**(அ) வினா அமைப்பில் அவதானிக்கப்பட்டவை**

- எழுத்து, எழுத்துக்களின் ஒலிப்புமுறை, சொற்புணர்ச்சி, பெயர்ச்சொல் வகைகள், மரபுப்பெயர், வேற்றுமை, வினை, அடைமொழிகள், வாக்கிய வகைகள், இடைச்சொல் ஆகிய இலக்கணப் பகுதிகளில் அமைந்துள்ளமை.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- எழுத்துக்களின் ஒலிப்புமுறை பற்றிய போதிய தெளிவின்மை.
- கூட்டுப்பகுதி, தற்சுட்டுப் பெயர்கள், எதிர்மறை வினை போன்றவற்றில் போதிய தெளிவின்மை.
- ஆக்கப் பெயர்கள் பற்றிய தெளிவின்மை.
- வேற்றுமைப் புணர்சி பற்றிய பூரணமான தெளிவின்மை.
- உயர்திணை, அ.்.றிணை அடிப்படையில் வினாப்பெயர்களை இனங்காண முடியாமை.
- வாக்கிய வகைகளை வகைப்படுத்தி அறியமுடியாமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- சொற்பிறப்பியல் முறை, ஒலியியல் முறை ஆகியவற்றின் அடிப்படையில் எழுத்துக்களின் ஒலிப்பு முறையை விளக்குதல்.
- வாக்கியவியலில் எழுவாய், பயனிலை இயைபை இனங்காணப் பயிற்றுவித்தல்.
- இலக்கண வரன்முறைகளை மரபு அடிப்படையிலும் தற்கால நடைமுறை இலக்கண முறையின் அடிப்படையிலும் விளங்கிக்கொள்ள பயிற்றுவித்தல்.

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

நம்முடைய தேசத்தாருள்ளே கடன்படும் வழக்கம் மிகப் பெரிது. கடன்படாதவர் நூற்றுவருள்ளே ஒருவர் கிடைப்பதும் மிக அரிது. அநேகர், சுகதுக்க கருமங்களிலே பிறர் செலவு செய்வதைப் பார்த்து, தாங்களும் அப்படியே செலவு செய்யாதொழிந்தால் தங்களுக்கு அவமானமாகும் என்று எண்ணிக் கண்ணை மூடிக்கொண்டு, அகப்படுமட்டும் கடன்பட்டுச் செலவு செய்கின்றார்கள். கடன்பட்டு வட்டி வளர்ந்தபின் முன்னுள்ளதும் இழந்து பசிநோயால் வருந்துதலும் கடனைத் தீர்க்க இயலாது கடன்கொடுத்த தனவந்தர் குடியைக் கெடுத்தலும் அவமானமல்லவாம்; வரவுக்கேற்ப மட்டாகச் செலவுசெய்து முட்டின்றி வாழ்தல் அவமானமாம். ஐயையோ! இவர்கள் அறியாமை இருந்தபடி என்னை! நம்முடைய தேசத்தார்கள் சுகதுக்க கருமங்களிலே செலவிடும் பொருள் பெரும்பாலும் யாவரிடத்தே சேர்கின்றது ? தொழில் செய்து சீவனஞ் செய்யச் சக்தியுடையவர்களாய் இருந்தும் அது செய்யாத சோம்பேறிகளிடத்தன்றோ ? யாசித்துப் பொருள் சம்பாதிக்கும் இச்சோம்பேறிகளுள்ளே அநேகர் உண்டுடுத்து எஞ்சிய பொருள் கொண்டு ஆபரணம் செய்வித்து, வீடு கட்டுவித்து, விளைநிலம் தோட்டம் முதலியவை வாங்கி, நூற்றுக்கு இரண்டு மூன்று வீதம் வட்டிக்குக் கொடுத்துக்கொண்டு செல்வர்களாய் இருக்கின்றார்களே. தொழில் செய்து வருந்திச் சம்பாதிப்பவர்களுள்ளே, அநேகர் சுகதுக்க கருமங்களிலே இவர்களிடத்திலே கடன்பட்டு, இவர்களுக்கே இறைத்துவிட்டு, வட்டி வளர்ந்தபின், இவர்கள் தங்கள் வீட்டுவாயிலில் வந்து சிறிதும் கண்ணோட்டமின்றித் தங்களை வாயில் வந்தபடி பேச, அவமானமடைந்து, தங்கள் சொத்துக்களை விற்றுக்கொடுத்துவிட்டு அன்னத்திற்கு அலைகின்றார்களே.

(10 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

முற்காலத்தே தமிழ் கற்கப்புகுந்தோர் இலக்கணம், நிகண்டு என்ற இருவகைக் கருவிநூல்களைக் கையாண்டு வந்தனர்.

நிகண்டுகளில் ஒரு சில ஒவ்வொரு பொருளுக்குமுரிய பல பெயர்களையும் ஒரு குறித்த நெறிமுறையே கூறிச் செல்வன. அவை ஒரு பொருட் பல்பெயர்த்தொகுதி எனப்படும். வேறுசில ஒவ்வொரு சொல்லுக்குமுரிய பல பொருள்களையும் விரித்துச் சொல்லுவன. அவை ஒரு சொற் பல்பொருட் பெயர்த்தொகுதி எனப் பெயர் பெறும். இன்னுஞ்சில 'இரு சுடர்', 'முக்குணம்' என்பன போன்ற தொகைப் பெயர்கள் இன்னின்ன பொருள்களை உணர்த்துகின்றனவென்று முறையே விளக்குவன. அவை பல்பொருட்கூட்டத் தொருபெயர்த் தொகுதியெனப் பெயர்பெறும். இவற்றுள், ஒருசொற் பல்பொருட் பெயர்த்தொகுதிக்கு மண்டலபுருடரியற்றிய சூடாமணி நிகண்டின் 11-ம் தொகுதி சிறந்ததொரு எடுத்துக்காட்டாக உள்ளது. இத்தொகுதியை முன்மாதிரியாகக் கொண்டு செய்யப்பட்ட நூல்களுள் ஒன்று அரும்பொருள் விளக்க நிகண்டு.

இத்தொகுதியின் வரலாற்றில் கால - அடைவில் நிகழ்ந்த வேறுபாடுகள் நன்கு ஆராய்ந்துணர்தற்குரியன. தொல்காப்பியப் பெருநூலின்கண்ணேயே இதற்குரிய தோற்றுவாய் இனிது புலப்படுகின்றது, அந்நூலிலே, சொல்லதிகாரத்தில், உரிச்சொல்லியற் சூத்திரங்களிற் சிலவற்றையும் அவை அமைந்துள்ள முறையையும் நோக்கினால் யான் கூறியதன் உண்மை வெளிப்படும். ஓர் உதாரணங் காட்டுகின்றேன்:

செழுமை வளனும் கொழுப்பு மாகும்.
விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்.

இவ்வடிகளில், 'செழுமை', 'விழுமம்' என்ற இரண்டு சொற்களுக்குமுரிய பல பொருள்களும் உணர்த்தப்படுகின்றன. அவ்வாறு உணர்த்துதலோடு அமையாது எதுகை நயத்தால் இவ்வடிகள் இன்புறுத்துகின்றமையும் நாம் மனங்கொளற்குரியது. இவை போன்ற உரிச்சொல் அடிகளின் பொருளமைதியும் எதுகை நயங்களுமே வரவரப் பலவாறாக விருத்தியடைந்து நிகண்டு நூல்களில் தனியே விளங்குவனவாயின. தொல்காப்பியத்திற்குப் பின்னரே தமிழில் நிகண்டு நூல்கள் தோன்றினவாகும்.

(i) பண்டைக்காலத்தில் தமிழ் கற்போருக்குப் பயன்பட்ட கருவிநூல்கள் யாவை ?

(ii) அரும்பொருள் விளக்க நிகண்டுக்கு முன்மாதிரியாக அமைந்த நூல் எது ?

(iii) ஒரு பொருட் பல்பெயர்த்தொகுதி, ஒரு சொற் பல்பொருள் தொகுதி என்பன எவற்றைக் குறித்து நிற்கின்றன?

(iv) தொல்காப்பியத்தை நிகண்டுகளின் முன்னோடி நூலாகக் கருதுவதற்குக் காரணம் என்ன ?

(v) எத்தகைய நிகண்டுகள் பல்பொருட்கூட்டத் தொருபெயர்த் தொகுதி எனப் பெயர் பெற்றன ?

(10 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

2. (அ) சுருக்கத்தில் இடம்பெற வேண்டிய விடயங்கள்:

- நம் நாட்டவருள் கடன்படாதவர் அரிது.
- சுக, துக்க கருமங்களுக்கு பிறர் செலவு செய்வதுபோலச் செலவு செய்யாவிடின் அவமானம் என்று கடன்படுகிறார்கள்.
- உண்மையில் அவமானப்பட வேண்டிய விடயங்கள் பற்றிக் கவலைப்படுவதில்லை.
- கடன்பட்டு ஆடம்பரமாகச் செலவு செய்யும் பொருள், பாடுபட்டு உழையாத சோம்பேறிகளைப் பணக்காரர்களாக்குகிறது.
- கடன்பட்டுச் செலவு செய்தவர்கள், வட்டிக்கு வட்டி கட்டி, வறுமைக்கும் அவமானத்திற்கும் ஆளாகி அலைகிறார்கள்.

(10 புள்ளிகள்)

(ஆ) i. இலக்கணம், நிகண்டு.

ii. மண்டலபுருடர் இயற்றிய சூடாமணி நிகண்டு.

iii. - ஒவ்வொரு பொருளுக்கும் உரிய பல பெயர்களையும் ஒரு குறித்த நெறிமுறையில் கூறுவது.
- ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய பல பொருள்களையும் விரித்துக் கூறுவது.

iv. தொல்காப்பியம், சொல்லதிகாரம் உரிச்சொல்லியற் சூத்திரங்களிற் சில, சொற்களுக்குரிய பல பொருள்களை உணர்த்துகின்றன. அவை எதுகை நயத்தால் இனிமை தருகின்றன. இத்தன்மைகள் நிகண்டு நூல்களில் விருத்தியடைந்தன.

v. இருசுடர், முக்குணம் போன்ற தொகைப் பெயர்களின் பொருளை உணர்த்தும் நிகண்டுகள்.

($02 \times 05 = 10$ புள்ளிகள்)
($10 + 10 = 20$ புள்ளிகள்)

**2 வது வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




இது கட்டாய வினாவாகும். இரண்டு பிரிவுகளை உடையது. ("அ" பிரிவு - சுருக்கம், "ஆ" பிரிவு - கிரகித்தல்) இவ்வினா பிரிவு ஒன்றுக்கு தலா 10 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகளைக் கொண்டது.

இதில் 00 - 05 ஆயிடையில் 3% ஆனோர்
06 - 10 ஆயிடையில் 24% ஆனோர்
11 - 15 ஆயிடையல் 59% ஆனோர்
16 - 20 ஆயிடையில் 14% ஆனோர்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவின் "அ" பிரிவின் இலகுதன்மை 51% ஆகும். "ஆ" பிரிவில் உபபிரிவு (i) கூடிய இலகுதன்மை (97%) உடையதாகும். (iv), (v) ஆகிய உபபிரிவுகள் குறைந்த இலகுதன்மையைக் கொண்டுள்ளன.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

"அ" பகுதி (சுருக்கம்)

- பந்தியைக் கிரகித்துப் பிரதான கருத்து, துணைக் கருத்து என்பவற்றை இனங்கண்டெழுத இடர்ப்பட்டமை.
- சுருக்கத்தில் தவிர்க்கப்பட வேண்டிய விடயங்களையும் உள்ளடக்கி எழுதியமை.
- மூலப்பகுதியில் உள்ள வாக்கியயங்களை ஆங்காங்கே தெரிவு செய்தும் சில வாக்கியங்களை இடையிடையே நீக்கியும் எழுதியமை. இதனால் தொடர்ச்சியின்மை, பொருள் மயக்கம், வாக்கியப் பிழைகள் ஏற்பட்டமை.
- கருத்துக்களைத் தொகுத்துத் தொடர்புபடுத்தி எழுதாமை.
- குறிக்கப்பட்ட சொல்லெண்ணிக்கையில் எழுதாமை.

"ஆ" பகுதி (கிரகித்தல்)

- குறித்த பந்தியை முழுமையாக வாசித்து விளங்கிக் கொள்ளாமை.
- கேட்கப்பட்ட வினாக்களைக் கிரகித்துச் சுட்டிப்பாக விடை எழுதாமை.
- விடைகளைப் பந்தியிலுள்ளவாறே மீண்டும் எழுதியமை.
- வினாக்களுக்குப் பொருத்தமாக, தெளிவாக விடையளிக்காமை.
- எழுத்துப்பிழைகள், வாக்கியப் பிழைகள் காணப்பட்டமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

சுருக்கம் :

- சுருக்கப் பகுதியை முழுமையாக வாசித்துக் கிரகிக்க வழிப்படுத்துதல்.
- உரைப்பகுதிகளை வழங்கி மையக்கருத்து, துணைக்கருத்துக்களை இனங்கண்டெழுத வழிப்படுத்தல்.
- சுருக்கம் எழுதும்போது தவிர்க்கப்பட வேண்டிய விடயங்களை நீக்கி முக்கியமான கருத்துக்களை இனங்கண்டெழுத பயிற்சியளித்தல்.
- முக்கியமான கருத்துக்களை திட்டமிட்டு ஒழுங்குபடுத்திய பின்னர் மீண்டும் ஒரே பந்தியில் சுருக்கி எழுத வழிப்படுத்துதல்.
- கருத்துக்களைத் தொகுத்து, வாக்கியங்களுக்கிடையிலான தொடர்பில் கவனம் செலுத்தி சொந்த மொழிநடையில் எழுதப் பயிற்சியளித்தல்.

கிரகித்தல் :

- உரைப்பகுதிகளை வழங்கி முழுமையாக வாசித்துக் கிரகிக்க வழிப்படுத்துதல்.
- வழங்கப்பட்ட பந்திகளை வாசித்து விடை எழுத பயிற்சியளித்தல்.
- கருத்து சிதையாது சொந்த மொழிநடையில் எழுத வழிப்படுத்தல்.
- சிறு வாக்கியங்களில் விடை எழுதப் பயிற்றுவித்தல்.

**2 ஆம் வினாவிற்கு பரீட்சார்த்தி ஒருவர் விடையளித்துள்ள விதமும் அது தொடர்பான விமர்சனமும்.**

2 (அ) நம்முடைய தேசத்தில் கடன்படுவோர் உண்டு. கடன் இல்லார் இல்லை. குறுகிய காலத்தில் மாற்றவரின் சுக துக்கங்களில் நிறைய செலவு செய்கிறார்கள் செய்யா விட்டால் தமக்கு அவமானம் என்று நினைக்கிறார்கள், கடன்பட்டு வட்டி வளர்ந்து பின் உண்மையும் கட்ட இயலாது கடன் கொடுத்தவர் கடனைக் கேட்டு அவமானப்பட்டு, நோய் பயமாய் வாங்குகிறார்கள் வரவுக்கேற்ப செலவு செய்ய வேண்டும் எம் நாட்டவர் சுக துக்கங்களின் செலவிடும் போது யாவரிடமும் பிறரிடத்தே கேட்கின்றனர். தொழில் செய்யாமல் சோம்பேறியாக பலரும் உண்டு; ஆடம்பரங்களில் செய்து கடன் பட்டு வட்டிக்கு கொடுக்கிறார்கள் பின்பு தொழில் செய்து சம்பாதிப்பவர்கள் இவர்களிடம் கடன்பட்டு வட்டி வளர்ந்த பின்பின் தாங்கள் தாங்க முடியாமல் பட்ட வேதனை அவமானம் அடைந்து தங்கள் சொத்துக்களை விற்று விட்டு அவர்களின் சாப்பாட்டிற்கு வழியற்று அலைகின்றனர்.

ஆ) i - இலக்கணம் நிகண்டு

ii - சூடாமணி நிகண்டின் 11-ம் தொகுதி

iii - • ஒரு பொருட் பல்பெயர்த்தொகுதி - ஒரு சில ஒவ்வொரு பொருளுக்கும் உரிய பல பெயர்களையும் ஒரு சேர்த்து தொகுத்துரைக்கும்
• ஒரு சொல் பல்பொருள் தொகுதி - ஒவ்வொரு சொல்லுக்குமுரிய பலபொருள்களையும் விரித்துச் சொல்லுவன. } iii

iv - தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்தில், உரிச்சொல்லியல் சூத்திரங்களில் சிலவற்றையும் அவை அமைந்துள்ள முறையையும், பொருள் அமைதி, சுருக்க நயங்களுடைய வரவர பலவாறாக விரித்துரைத்து நிகண்டு நூல்களில் தனியே விளங்குவனவாய் இருந்தது. மேலும் தொல்காப்பியத்தின் பின்னர் தமிழில் நிகண்டு நூல் தோன்றின. இதனால் நிகண்டுகளின் முன்னோடியாக தொல்காப்பியம் விளங்குகிறது. } iv

v - திருவர், முக்கணன் என்பன போன்ற தொகைப்பெயர்கள் இன்னின்ன பொருள்களை உணர்த்துகின்றன என்று முறையே விளங்குவதால் பல்பொருட் கூட்டத் தொகைப்பெயர்த்தொகுதி என பெயர்பெற்றன. } v

(அ) i. பிரதான கருத்தைச் சரியாக இனங்காணத் தவறியமை.

ii. துணைக்கருத்துக்களையே அதிகம் பிரயோகித்துள்ளமை.

iii. வாக்கியங்களை இணைத்து எழுதத் தவறியமை.

iv. உதாரணங்களைத் தவிர்க்காமை

v. வாக்கியங்களுக்கிடையே கருத்துத் தொடர்பைப் பேணாமை

vi முடிவுரையை கட்டுக்கோப்பாக எழுதாமை

(ஆ) • (i) ஆம் உபபிரிவுக்குரிய விடையின் அளவு அதிகமாக இல்லாது சுட்டிப்பாக ஒரு வாக்கியத்தில் / ஒரு சொல்லில் விடை அமைந்திருக்க வேண்டும்.

- உபபிரிவு (ii) இதற்கான விடை நேர்த்தியான விடையன்று. எனினும் விடை அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆயினும் இது அங்கீகரிக்கப்பட்ட மாதிரி விடையல்ல.

- உபபிரிவு (iii) இது சரியான நேரிடை விடையாக அமைந்துள்ளது.

- உபபிரிவு (iv) இது சரியான விடையாக அமைந்த போதும் கட்டுறுதியான விடையாக அமையவில்லை.

- உபபிரிவு (v) இது சரியான நேரிடை விடையாக அமைந்துள்ளது.

**3.** பின்வருவனவற்றுள் யாதேனும் **ஒரு** தலைப்பைத் தெரிந்து, **300 - 350** சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) இலக்கியக் கல்வியின் பயன்

(ஆ) தமிழ் இலக்கியத் திறனாய்வு வளர்ச்சியிலே பேராசிரியர் க. கைலாசபதியின் பங்களிப்பு

(இ) சமூக ஊடகங்கள் : நன்மையும் தீமையும்

(ஈ) சமூக நல்லிணக்கமும் அபிவிருத்தியும்

(உ) 'யாரையும் மதித்து வாழ்!' (20 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

3. (அ) இலக்கியக் கல்வியின் பயன்

- இலக்கியக் கல்வி என்றால் என்ன என்பதை விளக்குதல்.
- இலக்கியம் - மனித வாழ்வியல் அனுபவங்களை வெளியிடுவது.
- உள்ளார்ந்த இரசனைகளைத் தூண்டுவது.
- கற்பனை அம்சம் நிரம்பியது.
- சமூக விழுமியங்களைப் பற்றிப் பேசுவது.
- அறம், பண்பாடு முதலானவற்றை வற்புறுத்துவது.
- மனித உள்ளங்களைப் புரிந்துகொள்ள உதவுவது.
- மனித மேம்பாட்டை வலியுறுத்துவது.
- எத்துறை சார்ந்தாரையும் ஈர்க்க வல்லது.

(ஆ) தமிழ் இலக்கியத் திறனாய்வு வளர்ச்சியிலே பேராசிரியர் க. கைலாசபதியின் பங்களிப்பு

- தமிழ் இலக்கியங்களை விஞ்ஞானபூர்வமாக வரலாற்று ரீதியில் அணுகி விமர்சித்தமை.

- இலக்கிய வரலாற்றையும், சமூக வரலாற்றையும் தொடர்புபடுத்தி நோக்கியமை.
  - தமிழ் நாவல் இலக்கியம்
  - பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்
  - அடியும் முடியும்

- ஒப்பியல் அணுகுமுறையைக் கையாண்டமை.
  - தமிழ் வீரயுகப் பாடல்கள்
  - இரு மகாகவிகள்
  - ஒப்பியல் இலக்கியம்

- இலக்கியம், இலக்கியக் கோட்பாடுகள், விமர்சனக் கோட்பாடுகள் பற்றித் தெளிவுறுத்தியமை.
  - கவிதை நயம்
  - இலக்கியமும் திறனாய்வும்

- சமகால இலக்கியங்கள் பற்றிய மதிப்பீட்டை மேற்கொண்டும், இலக்கியத்தின் சமூகப் பயன்பாட்டை வலியுறுத்தியும், இலக்கியவாதிகளை நெறிப்படுத்தியமை, ஊக்குவித்தமை, இயக்க ரீதியாக (முற்போக்கு எழுத்தாளர் சங்கம்) செயற்பட்டமை.

- தேசிய இலக்கியத்தை வலியுறுத்தியமை.

- முக்கியமான சிலரது சமூக, இலக்கியப் பங்களிப்பினை மதிப்பிட்டமை. (பாரதியார், ஆறுமுகநாவலர், விபுலாநந்த அடிகள் முதலானோர்)

(இ) சமூக ஊடகங்கள் : நன்மையும் தீமையும்

- சமூக ஊடகங்கள் பற்றிய சுருக்கமான அறிமுகம்.
  (முகநூல், டுவிட்டர், வைபர், வட்ஸ்சப், வலைப்பூக்கள் முதலானவை)
- பிரதான ஊடகங்களுடன் ஒப்பிடுதல். (அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள்)

நன்மைகள்:
- தகவல்களை விரைவாகவும், சுலபமாகவும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு.
- தனிப்பட்ட நெருக்கத்திற்கான வாய்ப்பு.
- பல்லூடகத் தன்மை (ஒலி, ஒளி)
- பதிலளிக்கும் வாய்ப்பு (விரைவுத் தன்மை)
- கலந்துரையாடல் பண்பு, விவாதத்திற்கான வாய்ப்பு.
- பேசாப்பொருளையும் பேசும் வாய்ப்பு.
- குழுநிலையான இணைவுச் சாத்தியப்பாடு.

தீமைகள்
- அந்தரங்கத்தன்மை பாதிப்படைதல்.
- அடிமையாதல்.
- கால விரயம்.
- எண்ணப்போக்கு மாற்றம்.
- உறுதிப்படுத்தப்படாத தகவல் பரவுகை.
- ஆழமான வாசிப்பிற்கான சாத்தியமின்மை.
- விவாதத் தன்மை குறைவு.
- ஆளிடைத் தொடர்பாடல் குறைதல்.

(ஈ) சமூக நல்லிணக்கமும் அபிவிருத்தியும்

- சமூக நல்லிணக்கம் பற்றிய அறிமுகம்.
  - பல்லின சமூக அமைப்பில் இனநல்லிணக்கம், சமய நல்லிணக்கம் என்பன பற்றிய விளக்கம்.
- இன சமூக அமைப்பில் காணக்கூடிய பல்வேறு வேற்றுமைகளில் ஒற்றுமை காண்பது.
- இன, மத, கலை, கலாசார வேறுபாடு அற்று யாவரையும் மதித்து வாழும் தன்மை பற்றிய விளக்கமும், அதன் மூலமான நல்லிணக்கமும். (உதாரணம்: புத்தாண்டு விழா, இப்தார் நிகழ்ச்சிகள்)
- ஒரு நாட்டின் சமூக நல்லிணக்கமே அந்நாட்டில் அரசியல், சமூக, பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தும்
- அரசியல் சமத்துவம், சமூக உறவுச் சிறப்பு, பொருளாதார வளர்ச்சி என்பவற்றுக்கு நல்லிணக்கம் வித்திடும்
- ஒற்றுமை இன்றேல் அனைவருக்கும் தாழ்வே

(உ) “யாரையும் மதித்து வாழ்!”
- எல்லோருக்கும் சுய மரியாதை உணர்வுண்டு.
- ஆகவே எல்லோரும் யாரையும் மதித்தல் வேண்டும்.
- பிறரை மதியாதவன், பிறரால் மாத்திரமன்றி தன்னாலும் மதிக்கப்பட மாட்டான்.
  “மானுடம் போற்ற மறுக்கும் ஒரு
  மானிடன் தன்னைத் தன் உயிரும் வெறுக்கும்”
- இனம், மதம், பிரதேசம், நிறம், வர்க்கம், பால், வயது முதலானவற்றின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வு பார்த்து மதித்தல் தகாது.
  “யாதும் ஊரே யாவரும் கேளிர்”
- பிறரை மதிக்காது நடப்பதால் பகைமை விளையும்.
- சமூக விரோத மனப்பான்மை வளரும்.
- சமூக ஒற்றுமை குலையும்.

(08 + 08 + 04 = 20 புள்ளிகள்)

**3 வது வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும், முடிவுகளும், ஆலோசனைகளும் :**




இவ்வினா கட்டாயவினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 20 ஆகும். ஐந்து தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து எழுதுதல் வேண்டும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 4% ஆனோர்
06 - 10 ஆயிடையில் 42% ஆனோர்
11 - 15 ஆயிடையில் 49% ஆனோர்
16 - 20 ஆயிடையில் 5% ஆனோர்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




வினாத்தாள் II இல் வரும் இக்கட்டுரை வினா கட்டாயமானதாகும். இதில் “இ” பகுதியின் இலகுதன்மை 42% ஆகும். ஏனைய அ, ஆ, ஈ, உ ஆகிய பகுதிகளின் இலகுதன்மை குறைந்தளவாக அமைந்துள்ளன.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- தலைப்பிற்குப் பொருத்தமான வகையில் விடயங்கள் அமையாமை.
- இலக்கியக் கல்வியின் பயன் என்ற தலைப்பிலான கட்டுரையில் இலக்கியங்கள் பற்றியும், கல்வியின் பயன்கள் பற்றியுமே எழுதியிருந்தமை.
- "சமூக ஊடகங்கள்" பற்றிய தெளிவின்மை.
- "சமூக நல்லிணக்கமும் அபிவிருத்தியும்" என்ற தலைப்பிலான கட்டுரையில் நல்லிணக்கத்தையும், அபிவிருத்தியையும் தொடர்புபடுத்தி எழுதாது இன முரண்பாடு பற்றி எழுதியிருந்தமை.
- கட்டுரை அமைப்பு முழுமையாகப் பேணப்படாமை.
- பந்திகளுக்கிடையில் வெற்றுக்கோடுகளை விட்டு எழுதியமை.
- குறிக்கப்பட்ட சொல் எண்ணிக்கைக்குக் குறைவாக எழுதியிருந்தமை.
- மொழிச் செம்மை பேணப்படாமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- பல்வேறு கட்டுரைகளை வாசிக்க வழிப்படுத்துதல்.
- தலைப்பை வழங்கி அதற்கேற்ப தகவல்களைத் தேடி அறிந்து குறிப்பெடுக்க வழிப்படுத்துதல்.
- தலைப்பை விளங்கி கட்டுரைச் சட்டகம் அமைத்து எழுதப் பயிற்சியளித்தல்.
- பந்திகளுக்கிடையே தொடர்ச்சி, ஒருமைத் தன்மையைப் பேணி எழுத பயிற்சியளித்தல்.
- குறிக்கப்பட்ட சொல் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு எழுத பயிற்சியளித்தல்.
- மொழிச் செம்மை, இலக்கணச் செம்மையுடன் எழுதப் பயிற்சியளித்தல்.
- மேற்கோள்கள், உதாரணங்கள், சான்றாதாரங்களை முன்வைத்து பொருட் பொருத்தமுற எழுத வழிப்படுத்தல்.
- நிறுத்தற்குறிப் பிரயோகங்களைக் கருத்திற்கொண்டு எழுதப் பயிற்சியளித்தல்.

3 ஆம் வினாவிற்கு பரீட்சார்த்தி ஒருவர் விடையளித்துள்ள விதமும் அது தொடர்பான விமர்சனமும்.



- சமூக ஊடகங்கள் பற்றி அறிமுகம் செய்யாமை.
- கட்டுரையை தன்வயப்படுத்தி எழுதியமை (உ + ம் - பார்ப்போம் )
- கட்டுரைத் தலைப்பை விளங்கிக்கொள்ளாமை. அதாவது சமூக ஊடகங்கள் பற்றிய தெளிவின்மை. ஊடகங்களையும் சமூக ஊடகங்களையும் வேறுபிரித்து அறியாமை.



- தலைப்பிற்கு பொருத்தமான கருத்துக்களை முன்வைத்து எழுதாமை
- வாக்கியங்கள், பந்திகளுக்கிடையில் தொடர்பினைப் பேணி எழுதாமை
- கட்டுரை அமைப்பைப் பின்பற்றாமை.
- மொழிச் செம்மை பேணப்படாமை (எழுத்துத் தெளிவின்மை, எழுத்து, வசனப்பிழைகள்)
- தெளிவு, நேர்த்தியின்மை
- பந்திகளுக்கிடையேயான தொடர்பைப் பேணாமை.
- நன்மைகளையும் தீமைகளையும் ஒழுங்குபட நிரற்படுத்தி விவரிக்காமை.

## பகுதி II

### பிரிவு 'அ'

**4.** (அ) அகத்திணை, புறத்திணை என்ற பாகுபாட்டுக்கான அடிப்படையினைச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) புறத்திணை நூல்களின் வாயிலாகச் சங்ககாலப் புலவர்களைப் பற்றி அறிந்துகொள்ளக்கூடிய முக்கிய செய்திகள் யாவை ?

(இ) ஆற்றுப்படை இலக்கியத்தின் அமைப்பினையும் சங்ககாலத்தில் அது பெற்ற வளர்ச்சியினையும் விளக்குக. (15 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

4. (அ)
- சங்க இலக்கியங்கள் இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கை முறையைச் சித்திரிப்பன.
- அகம் : ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் உள்ளத்து உணர்வால் நுகரும் இன்பம். (காதல்)
  - முதல், கரு, உரி பொருத்தப்பாடு உடையன.
  - சுட்டி ஒருவர் பெயர்கொளப்படுவதில்லை
  - பாத்திரக் கூற்றாக அமைவன.
- புறம் : ஒத்த அன்புடையார் மட்டுமன்றி எல்லோராலும் அனுபவித்து அறியப்பட்டு ஈது இவ்வாறிருந்தது என்று கூறத்தக்க விடயங்கள்.
  - போரும் போரின் விளைவுகளும்
  - வீரம்
  - கொடை
  - நீதி
  - நிலையாமை முதலிய அறக்கருத்துக்கள்

(05 புள்ளிகள்)

(ஆ)
- புலவர்களால் புகழ்ந்து பாடப்படுவதை அரசர்கள் அவாவியமை
- புலவர்கள் சமூக, பொருளாதார ரீதியில் அரசர்களை அநுசரித்து நடக்கவேண்டிய நிலையில் இருந்தமை.
- சில புலவர்கள் சமூக விழுமியங்களை வலியுறுத்துபவர்களாக இருந்தமை.
- சிலர் அஞ்சாது நீதியை எடுத்துரைக்க வல்லவர்களாய் விளங்கியமை.

(05 புள்ளிகள்)

(இ)
- ஆற்றுப்படை இலக்கியத்தின் அமைப்பு
  - சங்க காலத்திலேயே தனியான இலக்கிய வடிவமாக வளர்ச்சியுற்ற சிறப்பினையுடையது.
  - வழிப்படுத்தல் என்று பொருள் உடையது.
  - புரவலன் ஒருவனிடம் பரிசில் பெற்ற ஒருவர் (கூத்தர்/பாணர்/புலவர்) இன்னொருவருக்கு அவனிடம் பரிசில்பெறும் மார்க்கத்தை எடுத்துரைப்பதாக அமைவது.
  - பாடாண்திணை சார்ந்தது.
  - பாட்டுடைத் தலைவனது கொடைச் சிறப்போடு அவனது வீரம், நாட்டுவளம் முதலானவற்றையும் புகழ்ந்துரைக்க வாய்ப்பானது
- சங்க காலத்தில் அது பெற்ற வளர்ச்சி
  - புறநானூற்றில் ஆற்றுப்படை அமைப்பில் அமைந்த பல செய்யுள்கள் உள்ளன.
  - நெடும் பாடல்களாக இயற்றப்பட்ட ஐந்து ஆற்றுப்படைகள் பத்துப்பாட்டில் உள்ளன. (பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, திருமுருகாற்றுப்படை)
  - ஆற்றுப்படுத்தப்படுபவரின் பெயராலன்றி பாட்டுடைத் தலைவன் பெயரால் அமைந்த திருமுருகாற்றுப்படையைப் பாடிய நக்கீரர், தம் இறையனுபவத்தைப் பாட, புது வழியில் திறமையோடு இதனைக் கையாண்டார்.

(05 புள்ளிகள்)

($05 \times 03 = 15$ புள்ளிகள்)

**4 வது வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




இதில் இவ்வினா விருப்பத் தெரிவு வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 15 ஆகும்.
இதில் 00 - 03 ஆயிடையில் 15% ஆனோர்
04 - 07 ஆயிடையில் 41% ஆனோர்
08 - 11 ஆயிடையில் 36% ஆனோர்
12 - 15 ஆயிடையில் 8% ஆனோர்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 44% ஆனோர் அரைவாசிப் புள்ளியிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 56% ஆனோர் அரைவாசிப் புள்ளியிலும் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 3 பிரிவுகளைக் கொணடுள்ளது. இவ்வினாவின் (அ) பிரிவு இலகுதன்மை கூடியதாகவும் (54%) (ஆ) பிரிவு இலகுதன்மை (40%) குறைந்ததாகவும் காணப்படுகின்றது.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.:**

- அகத்திணை புறத்திணை என்ற பாகுபாட்டிற்கான அடிப்படையை விளங்கி எழுதாமை.
- அகம், புறம் சார்ந்த விடயங்களை வேறுபடுத்தி எழுதாது கலந்து எழுதியமை.
- அகம், புறம் சார்ந்த விடயங்களில் ஒன்றை மட்டுமே எழுதியமை.
- சங்ககாலப் புலவர்கள் பற்றிய செய்தியை விடுத்துச் சங்ககாலப் புலவர்களின் பெயர்களை மாத்திரம் எழுதியமை.
- ஆற்றுப்படை நூல்கள், அமைப்பு பற்றி எழுதினார்கள். ஆனால் வளர்ச்சி பற்றி எழுதவில்லை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- அகத்திணை, புறத்திணை பற்றிய சரியான வரைவிலக்கணத்தை அறிய வழிப்படுத்துதல்.
- அகத்திணை, புறத்திணை சார்ந்த பொருள் மரபு பற்றிய விடயங்களை வகைப்படுத்தி முன்வைக்க வழிப்படுத்துதல்.
- ஒவ்வொரு காலத்திலும் எழுந்த இலக்கிய வடிவங்கள் அவற்றின் இலக்கணங்கள் அவை வெவ்வேறு காலகட்டத்தில் பெற்ற வளர்ச்சி ஆகியனவற்றை தொடர்புபடுத்தி கற்பித்தல்.
- கட்டமைப்பு வினாக்களை வழங்கி பொருத்தமுற விடை எழுதப் பயிற்சி வழங்குதல்.
- உதாரணங்களை எடுத்துக்காட்டி எழுதப் பயிற்சியளித்தல்.

**4 ஆம் வினாவிற்கு பரீட்சார்த்தி ஒருவர் விடையளித்துள்ள விதமும் அது தொடர்பான விமர்சனமும்.**



(அ) ● அகத்திணை, புறத்திணை பாகுபாட்டின் அடிப்படை வரைவிலக்கணத்தை விளங்கி விடை எழுதாமை.

● பொருத்தமான கருத்துக்களை முன்வைத்து விளங்கி எழுதாமை.

(ஆ) ● சங்ககாலப் புலவர் பற்றிய செய்திகளை விடுத்து சங்ககாலப் பாடு பொருள், அகத்திணை புறத்திணை, ஆற்றுப்படை இலக்கியம் என பொருத்தமற்ற விடயங்களை எழுதியமை.

(அ) ● ஆற்றுப்படை இலக்கிய நூல்களை அறிந்து எழுதாமை.

● ஆற்றுப்படை இலக்கியத்தின் அமைப்பை விளங்கி எழுதாமை.

● ஆற்றுப்படை இலக்கியத்தின் வளர்ச்சி பற்றி எழுதாமை.

5. (அ) சோழப் பெருமன்னர் காலத்தெழுந்த சிற்றிலக்கியங்களின் முக்கிய பண்புகளை எடுத்துக்காட்டுக.

(ஆ) உலாப் பிரபந்தத்தின் அமைப்பினையும் சோழப் பெருமன்னர் காலத்தில் அது பெற்ற வளர்ச்சியினையும் விளக்குக.

(இ) சயங்கொண்டாரின் கவியாற்றல் குறித்துக் கருத்துரை வழங்குக. (15 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்.**

5. (அ)
- சிற்றிலக்கியங்கள் அரசவைப் புலவர்களினால் அரசர் புகழை நிலைநிறுத்தும் பொருட்டு இயற்றப்பட்டுள்ளன.
- இவை பல வடிவங்களில் அமைந்துள்ளன.
  - பரணி - கலிங்கத்துப்பரணி, தக்கயாகப்பரணி
  - உலா - விக்கிரம சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, இராசராச சோழன் உலா
  - பிள்ளைத்தமிழ் - குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்
- அரசரின் ஆட்சிச் சிறப்பு, வீரம், கொடை, வெற்றித்திறன், குலமரபு முதலியவற்றைப் புகழ்ந்து கூறுகின்றமை.

(05 புள்ளிகள்)

(ஆ)
- தலைவன் வீதியில் உலா வர, அவனை பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழு பருவ மகளிரும் கண்டு காதல்கொள்வதைக் கூறுவது உலா என்னும் சிற்றிலக்கியமாகும்.

- பல்லவர் காலத்தில் இறைவன் உலா வருவதாக திருக்கைலாய ஞானஉலாவை சேரமான் பெருமாள் நாயனார் பாடினார். அவ்வுலாவின் அமைப்பினைப் பின்பற்றி சோழர் காலத்தில் அரசர் புகழ் பாடப்பட்டது. (விக்கிரம சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, இராசராச சோழன் உலா ஆகியவற்றின் தொகுதி மூவருலா எனப்பட்டது)

(05 புள்ளிகள்)

(இ)
- முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் நிகழ்ந்த கலிங்கத்துப் போரைக் கூறும் கலிங்கத்துப் பரணி என்னும் பிரபந்தத்தை சயங்கொண்டார் பாடினார்.
- அது பரணிப் பிரபந்தங்களுள் தலை சிறந்ததாகலின் பரணிக்கோர் சயங்கொண்டார் எனப் போற்றப்பட்டார்.
- தாம் கருதிய பொருளைப் புலப்படுத்துவதற்கேற்ற பல்வேறு அணிநலன்களையும் ஓசை, சந்தம் முதலியவற்றையும் அமைத்துச் செய்யுள் இயற்றுவதில் வல்லவர்.

(05 புள்ளிகள்)

($05 \times 03 = 15$ புள்ளிகள்)

**5 வது வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புக்களும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**

**வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




இதில் இவ்வினா விருப்பத் தெரிவு வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 15 ஆகும்.
இதில் 00 - 03 ஆயிடையில் 36% ஆனோர்
04 - 07 ஆயிடையில் 25% ஆனோர்
08 - 11 ஆயிடையில் 30% ஆனோர்
12 - 15 ஆயிடையில் 9% ஆனோர்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதில் (இ) பிரிவு இலகுதன்மை (57%) கூடியதாகவும் (அ) பிரிவு இலகுதன்மை குறைந்ததாகவும் (40%) காணப்படுகின்றது.

**குறைந்த அடைவுமட்டத்தைப்பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.:**

- பேரிலக்கியம், சிற்றிலக்கியம் பற்றிய பாகுபாடு தொடர்பான போதிய தெளிவின்மை.
- சோழர் காலத்துச் சிற்றிலக்கியங்களோடு ஏனைய காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்களையும் சேர்த்து எழுதியமை.
- சிற்றிலக்கியங்களை எழுதினார்களே ஒழிய சிற்றிலக்கியங்களின் பண்புகள் பற்றி எழுதாமை.
- இலக்கிய வடிவம் (உலா) பற்றிய போதிய விளக்கமின்மை.
- இலக்கிய வடிவத்தின் வளர்ச்சியை உரிய காலத்துடன் தொடர்புபடுத்தி விளக்குவதில் இடர்ப்பட்டமை.
- சயங்கொண்டார் பற்றி எழுதினார்களே ஒழிய கலிங்கத்துப்பரணியில் அவரது கவியாற்றல் பற்றி விளக்கி எழுதாமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- சிற்றிலக்கியங்கள் பேரிலக்கியங்கள் ஆகியவற்றின் பண்புகளை வேறுபடுத்தி எழுத வழிப்படுத்துதல்.
- ஒவ்வொரு காலப்பகுதியிலும் எழுந்த சிற்றிலக்கியங்கள், அவை எழுந்தமைக்கான பின்னணி, அவற்றின் பண்புகள் பற்றி தொடர்புபடுத்தி விளக்க வழிப்படுத்தல்.
- ஒருகாலத்தில் தோன்றிய சிற்றிலக்கிய வடிவம், அதனைத் தொடர்ந்த ஏனைய காலங்களில் அது பெற்ற வளர்ச்சி பற்றி தொடர்புபடுத்தி விளக்க வழிப்படுத்தல்.
- குறிக்கப்பட்ட காலத்தில் வாழ்ந்த புலவர்கள் அவர்கள் இயற்றிய நூல்கள் அவர்களின் கவியாற்றல் பற்றி விடயங்களைத் தொகுத்து எழுத வழிப்படுத்துதல்.
- இலக்கிய வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டம் பற்றிய முழுமையான அறிவைக் கொண்டு அக்காலகட்டத்தில் எழுந்த இலக்கியங்கள், அவற்றின் பண்புகள், அவற்றின் தொடர் வளர்ச்சி ஆகியன பற்றி கட்டமைப்பு ரீதியாக விடையெழுத பயிற்சியளித்தல்.

5 ஆம் வினாவிற்கு பரீட்சார்த்தி ஒருவர் விடையளித்துள்ள விதமும் அது தொடர்பான விமர்சனமும்.



அசைக்கப்பட்டவை

சோழர்கால சிற்பக்கலைகள் மண்டபங்களின் தூண்களிலே செதுக்கப்பட்டன. நடனக்கோலத்தில் உடைய நடராஜர் வடிவம் நாட்டியமும், சிவனுருவங்கள் உடைய நடனநிலை தேவாரத்தையும் [illegible] சாமுண்டி தேவியுடைய நடனநிலை சாமுண்டி சித்திரமும் காணப்படுகின்றது.

சோழர்கால சிற்பக்கலைகளை பார்ப்பதற்கு அழகாக அமைக்கப்பட்டுள்ளன. நகைகள், கிரீடங்கள், காதணிகள் என்பன பயன்படுத்தப்பட்டு செதுக்கப்பட்ட சிற்பங்களை காணப்படுகின்றன. கோயில் உருவங்களை காணமுடியும், கழுத்தில் அணிகலன் காதணிகள் போன்றும் பயன்படுத்தப்பட்டன.

சோழர்கால சிற்பக்கலைகளில் ஆபரணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. உருவத் தாலி, உடலில் அணிந்திருந்த அணிகலன்களும் உண்டு.

சோழர்கால சிற்பக்கலை பாடலை பல்லுக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளது கல்லுடன் படைக்கப்பட்ட கல் சிற்பங்கள் உருவங்களின் அழகியலையும் நுட்பத்தையும் படைப்பட்ட சிற்பத்தில் உருவங்களின் [illegible] செதுக்கப்பட்டுள்ளது.

சோழர்கால சிற்பக்கலைகளில் பரதம், ஆடல், நாட்டியம், அழகு, நடனம் போன்ற சிற்பங்களும் காணப்பட்டன.





(அ) ● சோழர்கால சிற்றிலக்கியங்கள், அவற்றின் உருவ, உள்ளடக்கப் பண்புகள் பற்றிய போதிய விளக்கமின்மை

● பிழையான தகவல்களைத் தந்தமை - உ + ம் திருக்கரசைப்புராணம் - இது இலங்கை இலக்கியம் மற்றும் கலிங்கத்துப் பரணியில் குலோத்துங்கன் காதல்

(ஆ) ● வினவப்பட்ட வினாவிற்குப் பொருத்தமில்லாது சோழர்கால வளர்ச்சி, புலவர்கள், மன்னர்கள் பற்றி விடையளித்துள்ளமை

● உலாப்பிரபந்தத்தின் அமைப்பு, சோழர்காலத்தில் அப்பிரபந்தம் பெற்ற வளர்ச்சி பற்றிய விளக்கமின்மை.

(இ) ● சயங்கொண்டார் பரணி இலக்கியத்தை இயற்றினார் என இனங்காணாமை.

● கலிங்கத்துப்பரணியில் வெளிப்படும் கவியாற்றல் பற்றி விளக்க முற்படாமை.

● சயங்கொண்டாருக்கும், புகழேந்திக்கும் இடையே வேறுபாடு அறியாமை, சயங்கொண்டார் நிடத நாட்டைப் பாடினார் எனப் பிழையாக எழுதியமை.

● விடயத்துக்குள் வராத பொது விடையாக இது அமைந்துள்ளமை.

**6. (அ) ஆரம்பகாலத் தமிழ் நாவல்களின் பொதுப் பண்புகளைத் துலக்குக.**

**(ஆ) தமிழ் நாவல் வளர்ச்சியிலே கல்கி பெறும் இடத்தினைப் பரிசீலிக்குக.**

**(இ) சமகாலத் தமிழ் நாவல்களை வகைப்படுத்தி விளக்குக.** **(15 புள்ளிகள்)**

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

6. (அ)
- பிரதாபமுதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் ஆகியவை தொடக்ககால நாவல்கள்.
- கதை சொல்லும் முறையிலும், மொழிநடையிலும் பழைய காவிய மரபின் செல்வாக்கு.
- அறப்போதனை, சமூக சீர்திருத்தம், பொழுதுபோக்கு, நகைச்சுவை

(05 புள்ளிகள்)

(ஆ)
- தமிழில் வரலாற்று நாவல் முன்னோடி
  - பொன்னியின் செல்வன்
  - பார்த்திபன் கனவு
  - சிவகாமியின் சபதம்
- சமூக நாவல்களும் எழுதியவர்
  - தியாகபூமி
  - அலை ஓசை
  - கள்வனின் காதலி
- சுவையாக, ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கதை சொல்லும் பாங்கு.
- தமிழ் நாவல் இலக்கியத்தை ஜனரஞ்சகமாக்கி வாசகர் தொகையை அதிகரிக்கச் செய்தவர்.
- தேசிய உணர்வு, விடுதலை உணர்வு, சீர்திருத்த உணர்வு, தமிழர் பண்பாடு பற்றிய பெருமித உணர்வு முதலானவற்றை ஊட்ட முனைந்தவர்.

(05 புள்ளிகள்)

(இ)
- சமகால சமூகப் பிரச்சினைகளைப் பேசுபொருளாகக் கொண்டவை.
  - சாதிப் பிரச்சினையை மையமாகக் கொண்டவை.
  - வர்க்க முரண்பாட்டைச் சித்திரிக்கும் நாவல்கள்
  - இன முரண்பாட்டையும் அவற்றின் விளைவுகளையும் வெளிப்படுத்துபவை
  - பெண்ணியம் சார்ந்தவை
- பிரதேச நாவல்கள்
- வரலாற்று நாவல்கள்
- உளவியல் அணுகுமுறை கொண்ட நாவல்கள்
- அறிவியல் புனைவு நாவல்கள்.
- துப்பறியும் நாவல்கள்
- தழுவல் / மொழிபெயர்ப்பு நாவல்கள்.

(05 புள்ளிகள்)

($05 \times 03 = 15$ புள்ளிகள்)

**6 வது வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புக்களும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**

**வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




இதில் இவ்வினா விருப்பத் தெரிவு வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 15 ஆகும்.
இதில் 00 - 03 ஆயிடையில் 41% ஆனோர்
04 - 07 ஆயிடையில் 8% ஆனோர்
08 - 11 ஆயிடையல் 29% ஆனோர்
12 - 15 ஆயிடையில் 22% ஆனோர்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவில் 51% ஆனோர் அரைவாசியிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 49% ஆனோர் அரைவாசியிலும் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

3% ஆன பரீட்சார்த்திகளே இவ்வினாவினைத் தெரிவுசெய்துள்ளமையால் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மையைக் காட்டும் வரைபை வரைவதற்கு போதுமான தரவுகள் கிடைக்கப்பெறவில்லை.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- தமிழ் நாவல் இலக்கிய வரலாறு பற்றிய போதிய தெளிவின்மை.
- ஆரம்பகால நாவல்களையும், பொதுப்பண்புகளையும் அறிந்து சுட்டிப்பாக விடை எழுதாமை.
- ஆரம்பகால நாவல்களை மாணவர்கள் சிலர் குறிப்பிட்டாலும் அவற்றின் பொதுப்பண்புகள் பற்றி எழுதாமை.
- கல்கியின் நாவல்களை எழுதாது, ஏனைய எழுத்தாளர்களின் நாவல்களைப் பரீட்சார்த்திகள் சிலர் எழுதியிருந்தமை.
- சமகாலத் தமிழ் நாவல்களை உரிய வகையில் வகைப்படுத்தி விளக்காமை.
- சாதிப் பிரச்சினை, பெண்ணியம், பிரதேசம் ஆகியன சார்ந்து மட்டுமே பரீட்சார்த்திகள் சிலர் நாவல்களை வகைப்படுத்தி இருந்தனர்.
- வகைப்பாட்டு நிலையிலும் நாவல்களைச் சரியான வகையில் எழுதாமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- நாவல் இலக்கிய வடிவம், அதன் பண்புகள், பேசுபொருள் முதலியன பற்றி அறிய வழிப்படுத்துதல்.
- கால அடிப்படையில் தமிழில் எழுந்த நாவல்களையும் அவற்றின் பண்புகளையும் நாவலாசிரியர்களையும் அறிந்து சுட்டிப்பாக விடை எழுதப் பயிற்சியளித்தல்.
- தமிழ் நாவல் வரலாற்றில் கருத்தியல் ரீதியாக எழுந்த நாவல்கள் அவற்றின் ஆசிரியர்கள் பற்றி அறிய வழிப்படுத்துதல்.
- மாணவர்கள் தாம் கற்ற நாவல்களைப் பற்றி விமர்சனபூர்வமாக எழுதுவதற்கான ஆற்றலை மேம்படுத்த பயிற்றுவித்தல்.

## பிரிவு 'ஆ'

**7.** **ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் ஈழத்தில் எழுந்த,**

**(அ) பள்ளு இலக்கியங்கள்**

**(ஆ) அம்மானை இலக்கியங்கள்**

**(இ) தூது இலக்கியங்கள்**

**என்பவற்றை இனங்கண்டு விளக்குக.** (15 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்.**

7. (அ) பள்ளு இலக்கியங்கள்

- ஞானப்பள்ளு / வேதப்பள்ளு
  - ஆசிரியர் பெயர் தெரியாது.
  - கிறிஸ்தவ சமயம் சார்பானது.

- பறாளை விநாயகர் பள்ளு
  - நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் இயற்றியது.
  - சைவ சமயச் சார்பானது.

- தண்டிகைக் கனகராயன் பள்ளு
  - மாவைச் சின்னக்குட்டிப் புலவர் பாடியது.
  - கனகராய முதலி என்னும் பிரபுமேல் பாடப்பட்டது.

(05 புள்ளிகள்)

(ஆ) அம்மானை இலக்கியங்கள்

- அர்ச். யாகப்பர் அம்மானை / சந்தியாகுமாயோர் அம்மானை
  - தெல்லிப்பளைப் பேதுருப் புலவர் இயற்றியது.
  - கிளாலி அர்ச். யாகப்பர்மேல் பாடப்பட்டது.

- திருச்செல்வர் அம்மானை
  - தெல்லிப்பளை பூலோகசிங்க முதலியார் / அருளப்ப நாவலர் இயற்றியது.
  - கிறிஸ்தவ இறையடியார் ஒருவர் பற்றியது.

(05 புள்ளிகள்)

(இ) தூது இலக்கியங்கள்

- குருநாத சுவாமி கிள்ளைவிடு தூது
  - வரத பண்டிதர் இயற்றியது.
  - காங்கேசன்துறைக் கண்ணியவளைப்பதி குருநாதசுவாமி (முருகன்) மேல் பாடப்பட்டது.
- பஞ்சவன்னத் தூது
  - இணுவில் சின்னத்தம்பிப்புலவர் இயற்றியது.
  - இணுவில் இளந்தாரி கைலாயநாதன்மேல் பாடப்பட்டது.
- தத்தைவிடு தூது
  - தி.த. சரவணமுத்துப்பிள்ளை இயற்றியது
  - நவீனத்துவப் பண்புகள் சிலவற்றைக் கொண்டது.

(05 புள்ளிகள்)

(05 x 03 = 15 புள்ளிகள்)

**7 வது வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




இதில் இவ்வினா விருப்பத் தெரிவு வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 15 ஆகும்.
இதில் 00 - 03 ஆயிடையில் 55% ஆனோர்
04 - 07 ஆயிடையில் 28% ஆனோர்
08 - 11 ஆயிடையில் 13% ஆனோர்
12 - 15 ஆயிடையில் 4% ஆனோர்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இதனடிப்படையில் வினாத்தாள் II இலுள்ள வினாக்களில் கடினத்தன்மை கூடிய ஒரு வினாவாக இது அமைந்துள்ளது.




மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ள இவ்வினாவின் (அ), (ஆ), (இ) ஆகிய பிரிவுகளுக்கான இலகுதன்மை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- மாணவர்கள் ஐரோப்பியர் கால இலக்கியங்களை வகைப்படுத்தும் திறனைப் பெறத் தவறியிருந்தமை.
- ஒரு சில பரீட்சார்த்திகள் இலக்கியங்களை வகைப்படுத்திய போதிலும் பொருத்தமான வகைகளுக்குள் பட்டியற்படுத்தவில்லை.
- ஐரோப்பியர் கால இலக்கியங்கள் பற்றிப் போதுமான அறிவைப் பரீட்சார்த்திகள் பெற்றிருக்கவில்லை.
- அநேகமான பரீட்சார்த்திகள் ஐரோப்பியர் காலத்தை ஆங்கிலேயர் காலம் எனக் கருத்திற் கொண்டே விடையளித்துள்ளனர்.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- ஐரோப்பியர் காலம் என்பது போர்த்துக்கேய, ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலங்களை உள்ளடக்கியதென்பதை மாணவர்கள் அறிய வழிப்படுத்துதல்.
- மூன்று காலங்களிலும் தோற்றம் பெற்ற இலக்கிய வகைகளை வகைப்படுத்திப் பட்டியற் படுத்திக் காட்டுதல்.
- ஐரோப்பியர்காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்கள், அவற்றின் அமைப்பு, பாடுபொருள், அதன் ஆசிரியர்கள் ஆகியன பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற வழிப்படுத்துதல்.

7 ஆம் வினாவிற்கு பரீட்சார்த்தி ஒருவர் விடையளித்துள்ள விதமும் அது தொடர்பான விமர்சனமும்.

அ) தமிழ் இலக்கிய வரலாற்றுப் பரப்பில் ஈழத்து வரலாற்றுப் பாங்கில் ஐரோப்பியர் காலமானது பெரு வளர்ச்சியுற்றிருந்தது. ஐரோப்பியர் காலமானது ஆரியச் சக்கர வர்த்திகளின் வீழ்ச்சியுடன் எழுச்சி பெற்றது. ஆரியச் சக்கரவர்த்தி காலத்தில் ஈழத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பல ஐரோப்பியர் காலத்தில் இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டது எனலாம். ஐரோப்பியர் ஆட்சியின் போது ஈழத்தில் பள்ளு, அம்மானை, தூது இலக்கியங்களின் வளர்ச்சி உயர்வாக காணப்பட்டது. பள்ளு அதிகாரம் ஐரோப்பியர் காலத்தில் சிறந்து காணப்பட ஐரோப்பியர் ஆட்சி பிரதான பங்கு வகிக்கிறது எனக் கூறலாம். 19ம் நூற்றாண்டு என்பது பள்ளு இலக்கிய வளர்ச்சிக்கு அதிக ஆதரவு ~~[illegible]~~ அளித்தது எனக் கூறலாம். உறுமையினர்களும் புலவர்களும் பள்ளுப் பிரபந்தங்களை பாடத்தொடங்கினர். பள்ளுப் பிரபந்தமானது அரசனின் ஆட்சியை அக்கால சமய நிலைமையையும் புலப்படுத்தி நிற்பதனை காணலாம். மேலும் ஐரோப்பியர் காலமானது அச்சியந்திர வருகைக்கு உட்பட்ட மாற்றிய காலம் என்பதால் பள்ளு இலக்கிய வளர்ச்சியும் சிறப்பாக இடம் பெற்றது. ~~[illegible]~~ எனவே ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் ஈழத்தில் எழுந்த இலக்கியங்களில் பள்ளு இலக்கியம் சிறப்புக்கின்றது.

ஆ) ஐரோப்பியர் காலம் ஆனது இலக்கியங்களின் வளர்ச்சிக் காலகட்டத்தில் பெரும் பங்கினை வகித்திருந்தது. ஐரோப்பியர் காலத்தில் பள்ளு, அம்மானை, தூது என்பவற்றின் வளர்ச்சியானது உயர்வாக காணப்பட்டது. இங்கு அம்மானை ஆனது மன்னர்களதும் கடவுளர்களினதும் புகழ் பாடுவதாகவும் அவற்றின் வீரம், வாதம், ஈகை என்பவற்றை வெளிப்படுத்துவதாகவும் சிறப்புப் பெற்றிருந்தன.

ஐரோப்பியர்களின் ஈழத்தில் வருகை

இவ்வாறாக வளர்ச்சி பெறும் அம்மானை போன்ற ஈழ இலக்கியங்களும் ஆதரவு வழங்கியமைப் பற்றான காணப்படுகிறது ஆரியச் சக்கரவர்த்தி காலம் தொட்டு ஐரோப்பியர் காலம் வரையான அம்மானை இலக்கிய வெளிவாக்கினை காண முடிகிறது.

மக்களும்.

அரசனும் தம் புகழ்பாடும் கொள்கையின் அம்மானையை படைத்தமை காண முடிகிறது.

இவ்வாறாக ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் ஈழத்தில் தோன்றிய இலக்கியங்களில் அம்மானை இலக்கியம் பெரும் வளர்ச்சி பெற்றிருந்தது.

ஆ) ஐரோப்பியர் காலம் என்னும் போது ஈழத்தில் தோன்றிய இலக்கியங்களில் பள்ளு இலக்கியம், அம்மானை இலக்கியம், தூது இலக்கியம் என்பனவற்றின் செல்வாக்கு சிறப்படைந்து.

அவற்றினுள்ளே தூது இலக்கியமானது ஒருவரிடமி-ருந்து தூது அனுப்புவதாக அமைந்தது அதாவது அரசனிடம் இருந்து இன்னொரு அரசனிடமோ, புலவனிடமிருந்து இன்னொரு புலவனிடமோ, தலைவனிடமிருந்து தலைவிக்கோ தூது அனுப்பப்பட்டு வந்தது.

இத்தூது ஆனது ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் புலவர்களால் அதிகமும், புலவரால் மக்களுக்கும் பாடப்பட்ட இலக்கியமாக காணப்படுகிறது

இவ்வாறாக ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் தூது இலக்கிய வளர்ச்சி சிறப்படைந்தது.

(அ) குறிப்பிட்ட இலக்கிய வடிவங்கள் பற்றிய தெளிவின்மை.

(ஆ) அரசர்கள் பள்ளு முதலிய இலக்கியங்களைப் படைத்தனர் என்று பிழையான தகவல் தந்தமை.

(இ) மேற்குறித்த இலக்கியங்களின் தோற்றப் பின்னணி குறித்த தெளிவின்மை. அந்த இலக்கியங்கள் பற்றிப் பிழையான விளக்கம் அளித்தமை.

(ஈ) குறிப்பிட்ட காலத்தில் தோன்றிய இலக்கியங்களின் பெயர்களைக் குறிப்பிடாமை.

**8.** மேல்வருவோருள் யாரேனும் **மூவரின்** தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கான பங்களிப்பினை மதிப்பிடுக.

(அ) நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

(ஆ) பாவலர் துரையப்பாபிள்ளை

(இ) பேராசிரியர் வி. செல்வநாயகம்

(ஈ) அருள்வாக்கி அப்துல்காதிர் புலவர்

(உ) நீலாவணன் (15 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்.**

8. (அ) நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் (1875 -1947)

- பன்மொழிப் புலமை
  தமிழ், சிங்களம்,ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்சு ...
- வாழ்க்கையின் பெரும்பகுதியை கிறிஸ்தவ மதபோதகராகக் கழித்தவர்.
  கத்தோலிக்க சமயச் சார்பான சிறு நூல்களையும், துண்டுப்பிரசுரங்களையும் எழுதி வெளியிட்டமை.
- மொழியாராய்ச்சியில் ஈடுபட்டமை.
  - தமிழ் அமைப்புற்ற வரலாறு
  - தமிழ் ஒப்பியல் அகராதி
  - தமிழ்ச் சொற்பிறப்பு ஆராய்ச்சி
  - மொழியாராய்ச்சிக் கட்டுரைகள் பல எழுதியமை.

- தமிழின் தொன்மையை வலியுறுத்தியமை.
- நாகரிக வளர்ச்சிக்குத் தமிழரின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியமை.
- வரலாற்று ஆராய்ச்சி.
  - யாழ்ப்பாண வைபவ விமர்சனம்.

(05 புள்ளிகள்)

(ஆ) பாவலர் துரையப்பாபிள்ளை (1872 - 1929)

- பாரதியின் சமகாலத்தவர்.
- இவர் படைத்த இலக்கியங்கள்:
  - இதோபதேச கீதரச மஞ்சரி
  - சிவமணிமாலை
  - யாழ்ப்பாண சுவதேசக்கும்மி
- இவரது படைப்புக்களில்,
  - மனித சமூக நலம்
  - சமூக சீர்திருத்தம்
  - சுயதேவைப் பூர்த்தியை நோக்காகக் கொண்ட விவசாய, கைத்தொழில் விருத்தி
  - கல்வி, ஒழுக்க மேம்பாடு
  - கீழைத்தேயப் பண்பாட்டு மறுமலர்ச்சி
  - தேசிய உணர்வு

  முதலான விடயங்கள் வலியுறுத்தப்பட்டன.
- பதம், கீர்த்தனை, கும்மி முதலான பொதுமக்கட் சார்பான செய்யுள் வடிவங்களைக் கையாண்டவர்.
- எளிமையான மொழிநடையை பிரக்ஞைபூர்வமாகக் கையாண்டவர்.

(05 புள்ளிகள்)

(இ) பேராசிரியர் வி.செல்வநாயகம் (1907 - 1973)

- பாடசாலை ஆசிரியராக, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராக, பல்கலைக்கழகப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.
- கற்பித்தலில் வல்லவர்.
- தமிழ் இலக்கிய வரலாற்றினைச் செம்மையான முறையில் முதன்முதலில் எழுதியவர்.
- தமிழ் உரைநடை வரலாறு எழுதியவர்.
- செயல்முறைத் திறனாய்வு வல்லுநர்.
- சிறந்த கட்டுரை ஆசிரியர்.
- சங்க இலக்கியம், தொல்காப்பியம் என்பன முதல் நவீன இலக்கியம் வரையில் பரந்த புலமையுள்ளவர்.

(05 புள்ளிகள்)

(ஈ) அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் (1866 - 1918)

- இலங்கை - கண்டியில் வாழ்ந்தவர்.
- சிறு வயதிலேயே பாடும் ஆற்றல் பெற்றவர்.
- கவி வல்லமை காரணமாக "அருள்வாக்கி" என்னும் பட்டம் பெற்றவர்.
- இஸ்லாம் பற்றிய ஆழ்ந்தகன்ற அறிவும், தமிழ்ப் புலமையும் உடையவர்.
- பல்வகைப் பாக்களையும் பிரபந்தங்களையும் இயற்றுவதில் அசாதாரண ஆற்றல் கொண்டவர்.
- பல்வேறு பிரபந்த வடிவங்களில் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார்.
    - சந்தத்திருப்புகழ்
    - மாலை (பேரின்ப ரஞ்சித மாலை, திருமதீனத்து மாலை, புதுமொழி மாலை...)
    - பதிகம் (பிரான்மலைப் பதிகம், தேவாரப் பதிகம், சலவாத்துப் பதிகம்...)
    - பிள்ளைத் தமிழ் (காரணப் பிள்ளைத்தமிழ், உமறொலியுல்லா பிள்ளைத் தமிழ்...)
    - கும்மி (காட்டுபாவா சாகிபு கும்மி)
    - கலம்பகம் (கண்டிக் கலம்பகம்)
    - அந்தாதி (தருபகுதாது அந்தாதி, கண்டி பதிற்றுப்பத்து அந்தாதி)
    - குறவஞ்சி (மெய்ஞ்ஞானக் குறவஞ்சி)
    - புராணம் (கோட்டாற்றுப் புராணம்)
    - முனாஜாத்து
- பல தனிச்செய்யுள்கள்.

(05 புள்ளிகள்)

(உ) நீலாவணன் (1931 - 1975)

- இயற்பெயர் : கே.சின்னத்துரை
- பயிற்றப்பட்ட தமிழாசிரியர்.
- ஈழத்து நவீன தமிழ்க்கவிதை முன்னோடிகளுள் ஒருவர்.
- கவிதை மாத்திரமன்றி சிறுகதை, உருவகக்கதை, நாடகங்கள், உரைநடைச் சித்திரங்கள் முதலானவற்றையும் எழுதியவர்.
- பல புனைபெயர்களில் எழுதியவர். (நீலாவணன், அம்மாச்சி, ஆறுமுகம், கொழுவுதுறட்டி, நீலவண்ணன்,இராமபாணம், சின்னான் கவிராயர்)
- மனித இயல்புகளை சுவாரசியமாகச் சித்திரிப்பதிலும் பிரதேசப் பேச்சு வழக்கைக் கையாள்வதிலும் வல்லவர்.
- கவிதைத்தொகுதிகள்: வழி, ஒத்திகை, நீலாவணன் காவியங்கள்.
- சிறுகதைத் தொகுதி: ஒட்டுறவு.
- நாடகம்: மழைக்கை.

(05 புள்ளிகள்)

($05 \times 03 = 15$ புள்ளிகள்)

**8 வது வினாவுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




இது ஒரு தெரிவு வினாவாகும். இவ்வினாவில் ஐந்து விடயங்கள் கொடுக்கப்பட்டு அவற்றுள் விரும்பிய மூன்று விடயங்கள் தொடர்பாக சிறுகுறிப்பு வரையுமாறு கேட்கப்பட்டுள்ளது. ஆகையால் இவ்வினா மூன்று பிரிவுகளை உடையதாக அமைகின்றது. பிரிவு ஒவ்வொன்றுக்கும் 5 புள்ளிகள் வீதம் இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 15 ஆகும். பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுக்கொண்ட விதம் வருமாறு.

இதில் 00 - 03 ஆயிடையில் 63% ஆனோர்
04 - 07 ஆயிடையில் 16% ஆனோர்
08 - 11 ஆயிடையில் 15% ஆனோர்
12 - 15 ஆயிடையில் 6% ஆனோர்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வகையில் 79% மான பரீட்சார்த்திகள் 07 புள்ளிக்கு குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர். 21% மான மாணவர்கள் மாத்திரம் 08 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.




ஐந்து பிரிவினை உடைய இவ்வினாவில் "ஊ" பிரிவு 20% இலகுதன்மை உடையதாகவும் "ஈ" பிரிவு 7% இலகுதன்மை உடையதாகவும் காணப்படுகின்றது. எவ்வாறாயினும் இந்த வினா ஒட்டுமொத்தமாக கடினதன்மை உடையதாகவே கொள்ளப்பட வேண்டியது. அதாவது 20% க்கு மேல் இதன் இலகுதன்மை அமையவில்லை.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- மாணவர்களின் விடைகளில் போதிய தகவல்கள் இன்மை.
- குறிப்பிட்ட அறிஞர்கள், கவிஞர்கள் பற்றிய தகவல்களை மாணவர்கள் முழுமையாக அறிந்திருக்கவில்லை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- மாணவர்களின் தேடல், வாசிப்பு என்பனவற்றை ஊக்குவித்தல்.
- ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் தடம்பதித்த அறிஞர்களையும் எழுத்தாளர்களையும் இனங்கண்டு அவர்கள் பற்றிய தகவல்களை அறிய வழிப்படுத்துதல்.
- ஈழத்து நவீன இலக்கியங்கள் தொடர்பான வாசிப்பை ஊக்குவித்தல்.

**8 ஆம் வினாவிற்கு பரீட்சார்த்தி ஒருவர் விடையளித்துள்ள விதமும் அது தொடர்பான விமர்சனமும்.**


பேராசிரியர் வி. செல்வநாயகம்

வி. செல்வநாயகம் அவர்கள் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான கருத்துக்களையும் வெளியிட்டுள்ளார். 1-3 வரையிலான கால சந்தர்ப்பம் என்பன வி. செல்வநாயகம் அவரது தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலில் கூறியுள்ளார்.

(அ) பூரணமற்ற விடை

(ஆ) செல்வநாயகத்தின் ஒரு பணி மட்டுமே எழுதப்பட்டுள்ளது.

2.2.3 வினாப்பத்திரம் II இற்கு விடையளித்துள்ளமை தொடர்பான பொதுவான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.

- பரீட்சார்த்திகளிடத்தில் இலக்கணம் பற்றிய அறிவு திருப்தியற்ற நிலையில் அமைந்திருப்பது அதவதானிப்புக்குரியது.
  - கூடிய புள்ளி வீதத்தைப் பெற்ற பரீட்சார்த்திகள் மிகக் குறைந்த வீதத்தினராகக் காணப்படுகின்றமையால் மாணவர்களுக்கு இலக்கணம் தொடர்பான தெளிவான அறிவினை ஏற்படுத்துதல் வேண்டும்.

- கிரகித்தல், சுருக்கம் ஆகிய இருபகுதிகளிலும் பரீட்சார்த்திகள் சிறப்பான துலங்கலைக் காட்டியிருந்தனர். மேலதிக முன்னேற்றத்திற்குத் தொடர் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

- கட்டுரை எழுதுவதில் பரீட்சார்த்திகள் தேர்ச்சி பெறவில்லை என்பது உணரப்பட்டுள்ளது. கட்டுரை எழுதும் நுட்பங்களை அறியச் செய்வதன் மூலமும் மாணவர்களிடம் வாசிப்புப் பழக்கத்தை வளர்ப்பதன் மூலமும் கட்டுரை எழுதும் தேர்ச்சியை ஏற்படுத்த முடியும்.

- தமிழ் இலக்கிய வரலாற்றிலும் ஈழத்து இலக்கிய வரலாற்றிலும் பரீட்சார்த்திகள் அதிக கவனம் செலுத்த வேண்டும். பொருத்தமான நூல்களை வாசித்து தகவல்களை அறிய வழிப்படுத்துதல் வேண்டும்.

- எழுத்து வழு, வாக்கிய வழுவில்லாது விடையெழுத பயிற்சியளித்தல் வேண்டும்.

# பாகம் III

## 3.0 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

## 3.1. விடையளித்தலின்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்

**பரீட்சார்த்திகளுக்கான ஆலோசனைகள்**

* விடை எழுதத் தொடங்க முன்னர் வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை, கட்டாய வினாக்கள் எவை, ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட வேண்டிய நேரம், பெறக்கூடிய மொத்தப் புள்ளிகள் என்பன பற்றிய விடயங்களில் கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் வினாக்களை நன்கு வாசித்து சரியாக விளங்கிக் கொண்ட பின் வினாக்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.
* வினாப்பத்திரம் I, II ஆகியவற்றின் பகுதி II இற்குரிய வினாக்களுக்கு விடையளிக்கும் போது முக்கியமான வினாக்களுக்குரிய விடைகளைப் புதிய பக்கத்தில் எழுத ஆரம்பித்தல் நன்று.
* வினாப்பத்திரம் II இன் பகுதி I இற்குரிய விடைகளை வினாவுக்கு எதிரே தரப்பட்டுள்ள அடைப்புக்குள் சரியான விடையின் இலக்கத்தை வினாப்பத்திரத்திலேயே குறிப்பிடுதல் வேண்டும்.
* வினா இலக்கம் மற்றும் பகுதி, உபபகுதி என்பவற்றின் குறியீடுகளைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
* ஒரு வினாவின் யாதாயினும் உபபகுதியொன்றுக்கு விடை எழுதாவிட்டால் அந்த உபபகுதிக்குரிய எழுத்து அல்லது உரோமன் இலக்கத்தை எழுதி அதற்கு எதிரே கோடு ஒன்றை இடுதல் வேண்டும்.
* கட்டாய வினாக்களுக்கு கட்டாயமாக விடையளித்தல் வேண்டுமென்பது நீங்கள் அறிந்ததே. அதேவேளை கட்டாய வினாக்கள் தவிர்ந்த ஏனைய வினாக்கள் அனைத்தையும் ஒரு தடவை வாசித்த பின்னர் விடை எழுத நீங்கள் உத்தேசித்துள்ள வினாக்களை அடையாளமிட்டுக் கொள்க.
* வினாத்தாளில் காணப்படும் வினா இலக்க ஒழுங்குக்கமைவாக இல்லாது உங்களால் மிக நன்றாக விடை எழுதக் கூடிய வினாக்களுக்கு விடைகளை எழுதத் தொடங்குக.
* வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்றவாறு வினாக்களைத் தெரிவு செய்வதுடன் மேலதிகமாக வேறு வினாக்களுக்கு விடை எழுதுவதைத் தவிர்த்துக் கொள்க.
* விடைத்தாளில் எல்லாப் பக்கங்களிலும் சுட்டெண்ணைக் குறிப்பிடுக.
* விடை எழுதும் போது நேரத்தைச் சரியாக முகாமை செய்வதில் கவனம் செலுத்துக.
* விடை எழுதுவதற்கு சிவப்பு, பச்சை நிறப் பேனைகளைப் பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்க.
* குறு விடைகள் எதிர்பார்க்கப்படும் வினாக்களுக்கு நீண்ட விடைகளையும், நீண்ட விடைகளை எதிர்பார்க்கப்படுவனவற்றுக்கு குறு விடைகளையும் எழுதுவதைத் தவிர்த்துக்கொள்ளவும்.
* நீண்ட விடைகள் எதிர்பார்க்கப்படும் வினாக்களுக்குத் தர்க்கரீதியாகவும் பகுப்பாய்வு ரீதியாகவும் விடயங்களை முன்வைத்தல் ஏற்றதாகும்.

## 3.2 கற்றல் - கற்பித்தல் செயன்முறைகள் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்

**ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள்**

* தமிழ்ப் பாடத்திற்குரிய தேர்ச்சி, தேர்ச்சி மட்டம், பாட உள்ளடக்கம், கற்றல் பெறுபேறுகள் பற்றிய தெளிவான அறிவு மொழி கற்பிக்கும் ஆசிரியருக்கு இன்றியமையாததாகும்.

* கற்பிக்க வேண்டிய பாடப்பகுதிகள் தொடர்பான ஆழமான அறிவினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் மேலதிக நூல்களைப் படித்தல் பயனுடையதாகும்.

* பாடத்திட்டத்திலும் ஆசிரியர் வழிகாட்டியிலும் அறிவுறுத்தப்பட்டதற்கமைய கற்பித்தல் பணியில் ஈடுபடுதல் பொருத்தமானதாகும். இவற்றை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது பற்றிய தெளிவான அறிவும் தேவைப்படும்.

* கட்டுரை எழுதுதல், சுருக்கம் எழுதுதல் பயிற்சி கிரமமாக வழங்கப்பட்டு அவை திருத்தப்பட்டு பின்னூட்டல் வழங்குதல் அவசியமானதொன்றாகும்.

* மாணவருக்கு மொழிக்கற்பித்தலில் ஆர்வத்தைக் காட்டும் வகையில் அவர்களது ஆக்கத்திறன் விருத்திக்கான செயற்பாடுகளை வழங்கலாம். குறிப்பாக கட்டுரை, சிறுகதை, கவிதை, ஓரங்க நாடகம் போன்றவற்றை எழுதுவதற்கான துலங்குதல் அளித்தல் பயனுடையதாகும்.

* பரீட்சையை மட்டும் மையமாகக் கொண்டு கற்பிக்கும் முறையைத் தவிர்த்துக் கொள்வது சிறந்தது.

* ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலை மேம்படுத்த தகவல் தொழினுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்வது சாலச் சிறந்தது.

* மாணவர்களிடையே கருத்துரைக்கும் திறன், கற்பனைத் திறன், சுருக்கி எழுதும் திறன், பெருக்கும் திறன் போன்றவற்றை விருத்தி செய்ய வேண்டுமானால் நூல்நிலையப் பயன்பாடு அவசியமானதாகும்.

* கட்டுரை அமைப்பிலான வினாக்களுக்கு விடையளிக்கும்போது அறிவுறுத்தல் செயற்பாடுகளுக்கான பதங்களான விவரித்தல், விளக்குதல், ஆராய்தல், விமர்சித்தல், ஒப்பிடுதல், கருத்துரைத்தல், நியாயப்படுத்தல் முதலியனவற்றின் அர்த்தத்தை விளங்கி எழுதவேண்டுமென்பதை வலியுறுத்தல் வேண்டும்.

* உயர் தர வகுப்புகளில் தமிழ் பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒன்றுகூடி மொழி கற்பித்தல் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளைக் கலந்துரையாடல் நல்லது. இதற்கான ஒழுங்குகளை வலயக் கல்விப் பணிப்பாளரினால் செய்ய முடியுமாயின் சாலச் சிறந்தது.

* ஆசிரியர்கள் பாடம் தொடர்பாகத் தமக்கு எழும் சந்தேகங்களை சக ஆசிரியர்களையும் சேவைக்கால ஆலோசகர்களையும் துறைசார் நிபுணர்களையும் அணுகியே தீர்த்துக் கொள்ள முடியுமென்பதில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

* ஆசிரியர்கள் பல்தேர்வு, குறுவிடை, கட்டமைப்பு மற்றும் கட்டுரை வகையிலான வினாக்கள் தயாரிப்பதில் போதிய திறனைப் பெறல் அவசியம்.

* ஒப்படையைத் திருத்தும் முறை பற்றியும் பின்னூட்டல் வழங்கும் முறைபற்றியும் தெளிவான அறிவு இருத்தல் இன்றியமையாததாகும்.